கச்சியப்ப சிவாச்சாரியார் அருளிய
கந்த புராணம் - பகுதி 9-2
4. யுத்த காண்டம் / படலம் 9 (1923 - 2397)

kantapurANam of kAcciyappa civAccAriyAr
part 9b /canto 4 (verses 1923 - 2397))
In tamil script Unicode /utf-8 format

Acknowledgements:
Our Sincere thanks go to Dr. Thomas Malten & colleagues of the Univ. of Koeln, Germany for providing with a transliterated/romanized version of this work and for permissions to release the Tamil script version as part of Project Madurai collections.
Our thanks also go to Shaivam.org for the help in the proof-reading of this work in the Tamil Script format.
Preparation of HTML and PDF versions: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland.

© Project Madurai, 1998-2008.
Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet.
Details of Project Madurai are available at the website
http://www.projectmadurai.org/
You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

கச்சியப்ப சிவாச்சாரியார் அருளிய
கந்த புராணம் - பாகம் 9-2
4. யுத்த காண்டம் / படலம் 12 (1923 - 2397)

உ
செந்திலாண்டவன் துணை
திருச்சிற்றம்பலம்

12. சிங்கமுகாசுரன் வதைப் படலம்* (1923 - 2397)
(* ஆறாநாள் சிங்கமுகாசுரன் வதை நிகழ்ந்ததாகும்.)

1923 என்னுலும் ஒற்றர் கேளா இறைவனை இறைஞ்சி ஏகி
உன்னுறு நினைப்பின் முந்தி உத்தரத் தளக்கர் நண்ணி
மன்னகர் புகுந்து ஞெள்ளல் கடந்துமந் திரத்துட் புக்குச்
சென்னியா யிரங்கொண் டுள்ள சிங்கமா முகவற் கண்டார். 1

1924 களித்தனர் மகிழ்ந்து தூதர் கான்முறை வணங்கி நிற்ப
அளித்திடும் அரசின் வைகும் அரிமுகன் வந்த தென்னை
கிளத்திடு வீர்கள் என்னக் கேடிலா அவுணர் மேலோன்
விளித்தனன் ஐய நின்னை விரைந்தனை வருக வென்றார். 2

1925 வேறு
சரத்தினுங் கடியவர் இனைய சாற்றலும்
அரித்திறல் முகத்தவன் வினவி ஆயிடை
விருத்தமுண் டேலது விளம்பு வீரெனா
உரைத்தனன் நன்றென ஒற்றர் கூறுவார். 3

1926 நும்பிஆ வரையாடு நுதிகொள் வேலினால்
அம்புலி வரைப்பில்வந் தட்ட கந்தவேள்
நம்பதி முன்னவன் நகர்வந் தெய்தினான்
செம்பது மன்முதல் தேவர் சூழவே. 4

1927 வந்திடும் எல்லைபோய் மலைந்து பைப்பயப்
புந்திகொள் அமைச்சருஞ் சிறாரும் பொன்றினார்
உய்ந்தனன் இரணியன் உததி ஓடினான்
எந்தையங் கிருந்தனன் புதுமை ஈதென்றார். 5

1928 தொழுந்துஆகி கையுடைத் தூதர் இன்னணம்
மொழிந்தது வினவலும் முனிவும் மானமும்
அழுந்திடு துயரமும் ஆகம் போழ்ந்திட
எழுந்தனன் அவுணரோ டேகல் மேயினான். 6

1929 முன்புறு கடையுறா மொய்த்த தூதரை
என்பெருஞ் சேனையைக் கொணர்திர் ஈண்டெனத்

தென்புலக் கோமகன் ஒற்றிற் செப்பலும்
மன்பெருந் தானைகள் வல்லை வந்தவே. 7

1930 தூசிகொள் நாற்படை துவன்றிச் சேர்தலும்
ஆசுறும் அரிமுகத் தண்ணல் கண்ணுறீஇப்
பாசன மன்னவர் பாங்கர் சுற்றிடத்
தேசுடை மணிநெடுந் தேரொன் றேறினான். 8

1931 தாரொலி செய்தன தாள்வ யப்பரி
பேரொலி செய்தன பிறங்கு பூட்கைசேர்
காரொலி செய்தன கண்டை ஆர்த்தன
தேரொலி செய்தன தெழித்த சில்லியே. 9

1932 முரட்டுடி சல்லிகை முரசங் காகளம்
உருட்டுறு சுரிமுகம் உடுக்கை துந்துபி
திரட்டுறு தண்ணுமை திமிலை யாதிகள்
இரட்டிய கேதனம் எங்கும் ஈண்டிற்றே. 10

1933 தழங்குரன் மால்கரி புரவி தானவர்
அழுங்குறு தேர்நிரை அனிகம் வானமே
வழங்குறு நெறியதா வலிதிற் சென்றன
முழங்கில பெயர்கில முகில்கள் அஞ்சியே. 11

1934 ஏயிது தன்மையின் ஈண்டு தானைகள்
பாயின சென்றிடப் பரிதி போலொளிர்
ஆயிர மவுலியன் அவுணர் நாயகன்
சேயுயர் விசும்பினில் எழுந்து சென்றனன். 12

1935 கன்னலொன் றளவையில் ககனத் தாற்றினால்
சென்னிகள் பலவுடைச் சீய மாமுகன்
மன்னவன் உறைதரு மகேந்தி ரப்புரந்
துன்னினன் வெருவியே சுரர்கள் ஓடவே. 13

1936 அடைத்தலை நீங்கிய அம்பொற் கோநகர்க்
கடைத்தலை வந்தனன் கனகத் தேரொரீஇப்
படைத்தலை மன்னவர் பரவ உள்புகாக்
கிடைத்தலை மேயினன் செழுமு சூரவை. 14

1937 அரசியல் புரிந்திடும் அவையை நண்ணிய
முரணுறு சிங்கமா முகத்தன் முன்னவன்
திருவடி மலர்களில் சென்னி தீண்டுறப்
பரிவொடு வணங்கினன் தொழுத பாணியான். 15

1938 வணங்கிய தம்பியை மலர்க்கை தொட்டெடா
இணங்கிய மார்புறுத் திறுகப் புல்லலும்

நிணங்கவர் வேலினாய் நினது செம்முகம்
உணங்கிய துற்றதென் உரைத்தியால் என்றான். 16

1939 என்னலும் அவுணர்கோன் இளைய வன்றனை
முன்னுற இருத்தியே முரணின் மேலையோய்
என்னிடை யுற்றன இசைப்பன் கேளெனா
அன்னவன் உணர்வகை அறைதல் மேயினான். 17

1940 அன்றுநீ போந்தபின் அயில்கொள் வேலினாற்
குன்றினை எறிந்திடு குமரன் என்பவன்
தன்றுணைச் சேனையுந் தானும் இந்நகர்
சென்றனன் பாசறை சேர்ந்து வைகினான். 18

1941 மற்றவன் சேனைகள் மலைய மைந்தர்கள்
இற்றனர் அமைச்சனும் இறந்து போயினான்
அற்றன தானையும் ஆட கப்பெயர்
உற்றவன் இரிந்தனன் உததி ஓடினான். 19

1942 பொங்குளை அரிமுக புகுதி இன்னதால்
சங்கையில் படையொடு சமரின் ஏகியே
அங்கவன் வலியினை யடர்த்து மீளுதி
இங்குனை விளித்தனன் இதனுக்கா வென்றான். 20

1943 எஞ்சலில் சூரன்மற் றிதனைச் செப்பலும்
வெஞ்சின அரிமுக வீரன் தேர்வுறா
நெஞ்சினில் ஆகுலம நிகழ முன்னவன்
செஞ்சரண் வீழ்ந்துநின் றிதனைச் செப்புவான். 21

1944 மல்லலம் புயமுடை மைந்தர் தங்களைத்
தொல்லையில் அமைச்சரைச் சுற்றத் தோர்களை
எல்லவர் தம்மையும் இழந்து வைகினாய்
புல்லிது புல்லிதுன் புந்தி எண்ணமே. 22

1945 மூலமும் முடிவுமில் லாத மூர்த்தியைப்
பாலனென் றெண்ணினை படுவ தோர்ந்திலை
ஆலம தானதே ஐய என்மொழி
மேலையின் விதியையார் வெல்லும் நீரினார். 23

1946 சென்றிடு புனலினைச் சிறைசெய் தாவதென்
இன்றினி ஏகியே எண்ண லாரெனத்
துன்றிய குழுவெலாந் துடைத்து நுங்கியே
நின்றிடு கின்றனன் நீயுங் காண்டியால். 24

1947 கந்தனாம் ஒருவனைக் கடக்கப் பெற்றிடின்
வந்துனைக் காண்பனால் மற்ற தில்லையேல்

அந்தம தடைவரால் ஆரும் ஐயநீ
புந்தியின் நினைந்தன புரிதியா லென்றான். 25

1948 என்றுகை தொழுதுபின் இறையும் அவ்விடை
நின்றிலன் விடைகொடு நிருதன் ஏகியே
துன்றிய தானைகள் சூழ மற்றவண்
ஒன்றுதன் மந்திரத் துறையுள் எய்தினான். 26

1949 போனக மேருவும் புடையில் சூழ்வரும்
ஊனெனும் வரைகளும் உலப்பில சோரிநீர்
தேனொடு பால்தயிர் தேற லாதிகள்
ஆனபல் கடல்களும் அயிறல் மேயினான். 27

1950 வாசநீர் தேய்ந்திடு நரந்த மான்மதம்
பூசினன் பாளித மிசையு னைந்தனன்
வீசுபன் மதுமலர் மிலைச்சு கின்றனன்
காசினி வரைப்பெலாங் கந்தஞ் சூழ்தர. 28

1951 களைந்தனன் பழையன கவினப் பூண்டனன்
வளந்தரு கின்றதோர் யாணர் மாண்கலன்
மிளிர்ந்திடு தினகரர் புணரி வீழந்துழி
ஒளிர்ந்துடன் பலகதிர் உதிக்கு மாறுபோல். 29

1952 படிதவிர் பருப்பதம் பத்து நூற்றினின்
முடிதொறும் இளம்பிறை முளைத்த வாறுபோல்
நெடுமைகொள் அரிமுகன் நெற்றி தோறும்வெண்
பொடிதனை உணிந்தனன் புனித மாயினான். 30

1953 தண்டமும் நேமியுஞ் சங்க ரன்தரக்
கொண்டதோர் சூலமுங் குலிச மேமுதல்
அண்டர்தம் படைகளும் அன்னை ஈந்திடு
திண்டிறற் பாசமுஞ் செங்கை பற்றினான். 31

1954 கைத்தலம் யாவையுங் கதிர்கள் கான்றிட
எத்திறப் படைகளும் பின்னர் ஏந்துறாப்
பத்துநூ றாயிரம் பரிகள் பூண்டதோர்
சித்திர மணிநெடுந் தேரில் ஏறினான். 32

1955 தந்திரத் லைவருந் தனயர் யாவருஞ்
சிந்துரத் தொகுதியுந் தேரும் மாக்களும்
இந்திரப் பெருவளம் யாவுஞ் சூழ்தர
மந்திரத் திருநகர் வயில் எய்தினான். 33

1956 வேறு
மேற்படு கேசரி வெம்முக வீரன்
மாற்படு கோநகர் வாய்தலின் மேவ

நாற்படை யானவும் நண்ணின வெம்போர்
ஏற்புடை வெள்ளமி லக்கம தன்றே. 34

1957 வானவர் ஏற்றமும் **மண்ணவரி வாழவும்
தானவர் இன்னலும் நீக்கிய தக்கோர்
ஊனமில் செய்கையோர் ஔளெரி உண்ணுங்
கானமெ னப்பொலி காட்சியின் மிக்கோர்.
(** பா-ம் - அன்னவர்) 35

1958 கார்பயில் கின்ற கருத்தினர் காமன்
கூர்பயில் கின்ற கொடுங்கணை யுண்ணுந்
தார்பயில் தோளர் சமர்த்தொழில் செய்தே
மார்பக மன்றி வடுப்புனை யாதோர். 36

1959 எண்ணமில் தொல்லுயிர் யாவும் அலைக்கும்
அண்ணலை அன்னவர் ஆரழல் காலுங்
கண்ணினர் வார்கழல் கட்டிய தாளார்
விண்ணினை யேனும் விழுங்கவும் வல்லரி. 37

1960 நேருதிர் என்றெதிர் நேர்ந்தவ ராகங்
கூர்நுதி வேல்கொடு கூறுப டுத்துப்
பேருதி ரந்தசை செய்துநி ரம்பா
வாரிதி யென்ன வகுத்திடும் வாயார். 38

1961 தண்ட மழுப்படை தட்டை முசுண்டி
விண்டுயா கொல்சிலை வேலெழு நாஞ்சில்
எண்டகு பல்படை யாவையும் ஏந்தி
அண்டமு டைந்த திரும்படி ஆர்த்தார். 39

1962 அந்தர மாமுகி லாமென ஆர்க்குந்
தந்திகள் வீழ்த்துறு தானம தோடி
உந்திக ளாயுல வைக்கதி கொண்டு
முந்திய தூசியின் முன்னுறு கின்ற. 40

1963 வேலைய தன்னவி லாழிய வன்னிக்
கோலம தான குரங்கொள் பதத்த
கால்விசை கொண்டன கந்துக ராசி
மாலுறு பூழியின் வான்புவி செய்வ. 41

1964 சூழ்வரு தேரிடை துன்றுப தாகைக்
காழ்வரு கோனுமதி கார்முகி லுந்தி
போழ்வன வாடுறு பூந்துகில் அங்கண்
ஆழ்வரு பூழைய டைத்தன அன்றே. 42

1965 வரங்கெழு சூர்துணை மாய்ந்திடும் என்றே
உரங்கொடு முன்னம் உணர்ந்தன கொலோ

துரங்கம ழுங்கின தோல்புலம் புற்ற
இரங்கின பல்லியம் ஏங்கின தேர்கள். 43

1966 கட்புலன் நாசிக வின்செவி துன்னப்
பட்டன பூழிப தாகையும் அற்றே
ஒட்டலர் விண்செல ஒட்டல ரென்னா
விட்டனர் தூக்கம் விரைந்தனர் வெய்யரி. 44

1967 தேரினர் ஓர்பலர் திண்டிறல் வாசி
ஊருநர் ஓர்பலர் ஓங்கிய வேழம்
பேருநரி ஓர்பலர் பேரடல் கொண்டு
பாரினரி ஓர்ப ராற்படை மள்ளர். 45

1968 துங்கமில் சூர்துணை தொல்படை மன்னன்
அங்கவன் என்ன அரித்தலை கொண்டான்
மங்கல மாயவள் மாமகன் ஆடற்
சிங்கன் எனப்படு சீர்ப்பெய ருள்ளான். 46

1969 போர்ப்படை கொண்டு புறப்டர் கின்ற
தேர்ப்படை காற்படை சிந்துரம் வாசித்
தார்ப்படை கொண்டு தடங்கட லென்ன
ஆர்ப்படை நெற்றிய னாகி அகன்றான். 47

1970 நீள்வயிர் பேரி நிசாளம் உடுக்கை
தாளம் வழிப்படு தண்ணுமை தக்கை
காளம் வலம்புரி கைத்துடி யாதி
யாளி முகன்முன் அளப்பில ஆர்ப்ப. 48

1971 ஆகிய தால்அமர் ஐதென யாமும்
ஏகுதும் உண்டி எமக்குள தென்னா
மாக நெருங்கின வன்கழு கீட்டங்
காகம் வருந்திய காளிகள் கூளி. 49

1972 வேறு
ஆழியை யொத்துய ரம்பொற் றேர்களில்
ஆழியை உண்டெழு புயல்வந் தார்த்தன
ஆழிய நிலத்துருண் டழுதி யோவெனா
ஆழியை வினவியே அமர்தல் போலுமால். 50

1973 இவ்வகை சேனைகள் யாவும் ஏழ்பெரும்
பவ்வமும் ஒருவழி படர்ந்த தேயென
அவ்வயிற் போந்திட அமரை முன்னியே
தெவ்வடும் அரிமுகன் சேறல் மேயினான். 51

1974 வேறு
சேரலா ஆவிகொள் சீயமு கத்தோன்

பேரனி கத்தொடு பேர்ந்திடல் காணூஉ
வாரிச மேலவன் வாசவன் வானோர்
ஆரும்வெ ரீஇயினர் அச்சம் அடைந்தரி. 52

1975 செய்ய கரத்தினர் சிந்தை வியர்த்தே
மெய்யல சுற்றிட மேற்றுகில் சோர
ஐயுறும் எல்லையில் ஆகம் இரைப்ப
ஒய்யென யாவரும் ஓடினர் போனார். 53

1976 ஆவதொர் பாசறை ஆலய வைப்பில்
தேவர்கள் ஈண்டுறு சிற்சபை தன்னில்
மேவரு வேற்படை விண்ணவன் முன்போய்ப்
பூவடி தாழ்ந்து புகன்றிடு கின்றார். 54

1977 ஆயிர மான அகன்றலை கொண்டான்
ஆயிரம் ஆயிரம் அங்கை படைத்தான்
ஆயிர மேற்படும் அண்மும் வென்றான்
ஆயிரம் யோசனை யாவுயர் மெய்யான். 55

1978 நெஞ்சில் எவர்க்கும் நினைப்பரி தாகும்
வஞ்சமும் மாயையின் வன்மையும் வல்லோன்
எஞ்சலில் வன்மையன் இவ்வுல கெல்லாந்
துஞ்சினும் ஆருயிர் துஞ்சுத லில்லோன். 56

1979 ஓங்கல் இனங்கள் உவாத்தொகை நாகம்
பாங்கம ராமை பரித்திடல் மாற்றி
ஈங்குல கங்கள் எவற்றையும் ஓர்நாள்
ஆங்கொரு செங்கையில் ஆற்றிய தொல்லோன். 57

1980 பாந்தள் புனைநத பராபர மூர்த்தி
ஈந்தது மாற்றலர் எல்லையி லோரைக்
காய்ந்துயி ருண்டு கறைப்பெரு நீத்தந்
தோய்ந்திடு கின்றதொர் சூலம் எடுத்தான். 58

1981 எண்டிசை மேதினி ஏழ்பில மேனை
விண்டல மன்னதன் மேற்படும் எல்லை
அண்டம னைத்தும் ஒரங்கையில் வாரி
உண்டுமிழ் கின்றதொர் வன்மையும் உள்ளோன். 59

1982 தூக்[illegible]ரு பால்வலி தூங்குற ஓர்பால்
மேக்குயர் கோலென மேதினிப் பாங்கர்
தேக்கெறி வேலைகள் சிந்தி விசும்பில்
தாக்குற வேநடை தந்திடு தாளான். 60

1983 தண்ட மிதென்று தருக்கின் எடுத்தே
அண்ட கடாகம் அதன்புடை மோத

நுண்டுகள் ஆதலும் நொய்திது வென்றே
விண்டொடு மேருவை மீளவும் வைத்தோன். 61

1984 மாசறு நேமி வடாது புலத்தின்
ஆசுரம் என்னும் அகன்பதி வாழ்வோன்
வீசிடின் எவ்வுல கத்தையும் வீக்கும்
பாசம் இரண்டு பரித்திடு கையான். 62

1985 துங்கம தாகிய சூர்துணை யானோன்
அங்கவ னற்பெரி தாற்றல் படைத்தோன்
ரூங்களின் நங்களை நாளும் நலித்தொன்
சிங்கமு காசுர னாகிய தீயோன். 63

1986 அந்தமி லாவணி கக்கடல் சூழ
வெந்திற லோடு வியன்சமர் ஆற்ற
வந்தனன் மற்றவன் மன்னுயிர் மாற்றி
எந்தை அளித்தருள் எங்களை யென்றார். 64

1987 அன்னதை ஓர்தலும் ஆறு முகேசன்
தன்னயல் நின்றிடு தாவறும் ஓதை
மன்னனை நோக்கிநம் வாலிய தேரை
முன்னிவண் முய்க்குதி யென்று மொழிந்தான். 65

1988 தீட்டிய வேற்படை செங்கை படைத்தோன்
மாட்டுற நின்ற வயம்புனை மொய்ம்பன்
கேட்டனன் எந்தை கெழீஇயின முன்போய்த்
தாட்டுணை வீழ்ந்திது சாற்றுதல் உற்றான். 66

1989 தந்நிகர் அற்ற சயம்புனை வீரர்
முன்னுறு தானைகள் மொய்த்திட யான்போய்
ஒன்னலன் ஆவியை உண்டிவண் மீள்வன்
என்னை விடுக்குதி எந்தையை யென்றான். 67

1990 ஆண்டகை மூரலொ டம்மொழி கேளா
மாண்டிட வந்திடு மாற்றலன் வெம்போர்
வேண்டினை நன்று விடுத்தனம் முன்நீ
ஈண்டுள தானையொ டேகுதி யென்றான். 68

1991 என்றலும் வீரன் எழுந்துகை கூப்பி
வென்றிகொள் சாரதர் மெய்க்கிளை சூழ
மன்றம கன்று மணிக்கடை நண்ணி
ஒன்றுதன் மாளிகை யூடு புகுந்தான். 69

1992 நேர்முக மான நிசாசரர் தம்மேல்
கூர்முக வாளி குணிப்பில கோடி

ஓர்முக மாயுல வாதுமிழ் நீரால்
கார்முக மாயதொர் கார்முகங் கொண்டான். 70

1993 போதுறழ் அங்குலி புட்டில்செ றித்தான்
கோதைய தொன்று கொடுங்கை பிணித்தான்
ஏதமில் சாலிகை யாக்கையின் இட்டான்
மேதகு தூணி வெரிந்புடை யாத்தான். 71

1994 மிக்குறு தெய்வ வியன்படை முற்றும்
தொக்குற வேகொடு தும்பை தரித்துச்
செக்கரின் விஞ்சிய செய்யதொர் வையம்
புக்கனன் வல்லை புறங்கடை வந்தான். 72

1995 எண்மர் இலக்கர்கள் இச்செயல் காணா
வண்மை தருமபடை மாட்சிமை எய்தித்
திண்மை யுறுந்தம தேர்களி லேறி
அண்மினர் வீரனை ஆர்ப்பொடு சூழ்ந்தார். 73

1996 மேனிக ழாயிர வெள்ளம தாகுஞ்
சேனை யெழுந்து செறிந்து பிறங்கல்
வானுயர் தாரு வயப்படை பற்றித்
தானவர் கேசரி தன்புடை வந்த. 74

1997 எறிந்தன பல்லியம் ஈண்டிய தானை
செறிந்தன மாண்கொடி செற்றின பூழி
அறந்தலை நின்றவன் அன்னது நோக்கிப்
பறந்தலை ஒல்லை படர்ந்திட லுற்றான். 75

1998 ஆரும்வி யப்புறும் ஆயிர வெள்ளம்
பாரிடர் தானை படைக்கிறை யானோர்
சாருறு கேளிர்கள் தன்னொடு செல்ல
வீரன டைந்தனன் வெஞ்சமர் எல்லை. 76

1999 ஆனதொர் ககலையில் ஆளரி வெய்யோன்
சேனையும் வந்து செறிந்தது பூதர்
தானையும் அங்கெதிர் சார்ந்தது கங்கை
வானதி சேர்தரும் வாரிதி யேபோல். 77

2000 கோடு புலம்பின கொக்கரை ஆர்த்த
மோடுகொள் பேரி முழங்கின பீலிக்
காடு தழங்கின கண்டை கலித்த
ஆடுப தாகைகள் ஆர்த்தன அன்றே. 78

2001 தேரொலி செய்தன திண்டிறல் மாவின்
தாரொலி செய்தன தந்தியின் ஈட்டம்

பேரொலி செய்த பெருங்கட லோடும்
காரொலி செய்திடு காட்சிய தென்ன. 79

2002 வேறு
அந்த வேலையின் முருகவேள் தானையோர் அணுகி
முந்து வெஞ்சமர் முயன்றனர் அதுகண்டு முனிந்து
சுந்த ரந்திகழ் சிங்கமா முகன்படைத் தொல்லோர்
தந்தி தேர்பரி யணியொடும் போசெயச் சார்ந்தார். 80

2003 தண்டம் ஓச்சினர் கணிச்சிகள் ஓச்சினர் தடக்கைப்
பிண்டி பாலங்கள் வீசினர் தோமரம் பெய்தார்
கொண்ட லாமெனத் தனித்னி வார்சிலை குனித்துத்
துண்ட வெங்கணை துரந்தனர் தானவத் தொகையோர். 81

2004 விரைகள் வீசிய மலர்த்தரு வீசிய விண்டோர்
வரைகள் வீசிய தண்டெழு வீசிய மழுவின்
நிரைகள் வீசிய நேமியின் நிரந்தபல் வளனும்
திரைகள் வீசிய தாமெனப் பூதர்தஞ் சேனை. 82

2005 வரங்கள் சிந்தினர் வன்மைகள் சிந்தினர் வயத்தாள்
கரங்கள் சிந்தினர் புயமலை சிந்தினர் கலன்சேர்
உரங்கள் சிந்தினர் மணிமுடி சிந்தினர் உருளுஞ்
சிரங்கள் சிந்தினர் அவுணரும் பூதரிற் சிலரும். 83

2006 வருதி நீயெனத் தனித்தனி இகல்செயும் மறவோர்
கருதி யேயடுங் களத்தினில் அவருடல் காலும்
குருதி யோடியே எங்கணும் பரத்தலில் கொடுந்தேர்ப்
பரிதி யோடிய குடதிசை நிகர்த்தது படியே. 84

2007 கொலைசெ றிந்திடும் பூதரும அவுணரும் கொடும்போர்
நிலைசெ றிந்திடு களத்திடை நீடுசெந் நீரின்
அலைசெ றிந்தவூன் செறிந்தன அடுகளே வரத்து
மலைசெ றிந்தன செறிந்தன கழுகுடன் மண்ணை. 85

2008 வேறு
வெற்புறழ் தகுவர் சேனை வெள்ளமுங் கணத்து ளருந்
தற்பமொ டெதிர்ந்திவ் வாறு சமர்புரிந் திட்ட எல்லை
வற்புடன் அவுணன் தானை மள்ளர்வந் தடர்ப்ப மாய்ந்து
முற்படு கின்ற தூசிப் பூதர்கள் முரிய லுற்றார். 86

2009 செல்லுறழ் பகுவாய் வீரர் சிதைந்துழிப் பூதர் தம்முட்
கல்லுறழ் மொய்ம்பிற் சிங்கன் கனன்றொரு தண்ட மேந்திப்
பல்லுறு தலைகள் சிந்தப் படிமிசை வீட்டிப் பானாள்
அல்லுறு மதிபோல் நேரும் அவுணரை யடாத்துச் சென்றான். 87

2010 அங்கவன் செல்லும் வேலை அவுணரில் ஒருவன் நேமி
சங்கொடு தரித்தோன் அன்னான் தசமுக னென்னும் பேரோன்
எங்குநீ போதி நில்லென் றெதிருறச் சென்று வாகைச்
செங்கைவரி சிலையைக் கோட்டித்
திருந்துநாண் ஒலிசெய் திட்டான். 88

2011 வேறு
விட்டனன் மழையென விசிகம் ஆங்கவை
பட்டிடத் தண்டினாற் படியில் வீட்டியே
அட்டுபூந் தாரினான் அடியொன் றாலவன்
இட்டதோர் கவசமும் இறுத்து நீக்கவே. 89

2012 கூற்றுறழ் தசமுகன் கொடியன் ஆவியை
மாற்றுவன் இவனென வலிதின் ஓர்கதை
ஆற்றலின் விடுத்தலும் அரியின் பேரினான்
எற்றனன் மார்புதண் டிற்று வீழ்ந்ததே. 90

2013 வீண்டது நோக்கியே வீர வீரனும்
ஈண்டிவ னேகொலென் றெண்ணி யாமினிக்
காண்டகும் வல்லையேற் காத்தி யீதெனா
ஆண்டொரு கணிச்சியை அவுணன் ஓச்சினான். 91

2014 மாலொடு கடவுளர் மறுகத தீயழற்
காலொடு போந்திடுங் கடுவின் வெம்மைபோல்
மேலுறு கணிச்சியை வீரன் செங்கையின்
பாலுறு தண்டினாற் படியில் வீட்டினான். 92

2015 நீக்கினன் கணிச்சியை நெடிய தோர்கதை
போக்கினன் தன்னொடு போர்செய் கின்றவன்
தாக்கணங் கமர்சிலை தன்னைச் சின்னமே
ஆக்கினன் அவுணர்கள் அலக்கண் எய்தினார். 93

2016 சீலமில் தசமுகன் செயிர்த்துக் காய்கனற்
கோலம தாகிய குந்தம் ஒன்றினை
ஆலம தெனவிட அரியின் பேரினான்
மேலுற வருவதை விரைந்து நோக்கினான். 94

2017 பூங்கழல் புனைகழற் பூத நாயகன்
ஆங்கது காலைஓர் ஆழி மாப்படை
ஓங்கிய பரிதிபோல் உருட்டி னானரோ
பாங்குறு சாரதர் பலரும் போற்றவே. 95

2018 விடுத்திடு கின்றதோர் வஅலை யாழிபோய்ப்
படுத்தது தசமுகப் பதகன் தண்டமொன்
றெடுத்தது வீசலும் இமைப்பில் எய்தியே
அடற்புனை கழலினான் ஆகத் துற்றதே. 96

2019 ஆகமேல் அடைதலும் அரியின் பேரினான்
சோகமேல் கொண்டுசெஞ் சோரி சேர்தர
மாகமேற் செம்புனல் மாரி கான்றி
மேகமே யாமென விளங்கி னானரோ. 97

2020 பரந்திழி குருதிநீர் பருப்ப தத்திடைப்
பிரிந்திடு நதியெனப் பெருக ஓடியே
அருந்திறல் சதமுக னாகத் தோர்கையால்
விரைந்தனன் புடைத்தலும் வீழ்ந்து பொன்றினான். 98

2021 ஐந்திரு தலையுடை அவுணன் மாய்தலுந்
தந்திர அவுணர்தந் தானை யாவையும்
கந்த தோளுடைக் கணங்கள் மேற்செலா
முந்துறு பேரமர் முயல்வ தாயினார். 99

2022 அவ்வழி இலக்கரில் அநகன் என்பவன்
மைவழி சிந்தையன் மடிதத வாயினன்
கைவழி வில்லினன் கடியன் சேனையை
எவ்வழி போதிரென் றெதிர்ந்து தாக்கினான். 100

2023 வெலற்கரும் வில்லுமிழ் வெங்கண் வாளியால்
அலைக்குந ராகியே அடல்செய் மள்ளர்தந்
தலைக்குவை சிந்தியே தரையில் வீட்டியே
கலக்கினன் திரைக்கடல் கடைந்த மாலென. 101

2024 ஆடியல் தானையான் அநகன் என்பவன்
சாடினன் திரிதலுந் தகுவர் யாவரும்
ஓடினர் அன்னதை உருத்து நோக்கினான்
பீடுறு துன்முகன் என்னும் பேரினான். 102

2025 வேறு
தன்முன் ஓடிய அவுணரை நோக்கிநீர் தளரேல்
மின்மி னிக்குலங் கதிரினை வெல்லுமோ வெகுளின்
என்முன் நிற்பரோ பூதர்கள் செருத்தொழில் இழந்தார்
நின்மின் நின்மினென் றுரைக்கவும் இறையநின் றிலரால். 103

2026 தானை பட்டன நோக்கினன் துன்முகன் தழல்மேல்
ஆனெய் பட்டென முனிந்தனன் பூதர்கள் அந்தோ
சேனை பட்டதென் றலமரக் குனித்தனன் சிலையைச்
சோனை பட்டன வாமென வடிக்கணை சொரிந்தான். 104

2027 சொரிந்த காலையிற் பூதரும் பேரமர் தொடங்கி
விரிந்த வெற்பொடு தருக்களும் படைகளும் விடுப்ப
எரிந்து போயின சிற்சில இற்றவுஞ் சிலவால்
நெரிந்து போயின சிற்சில எதிரெதிர் நெருக்க. 105

2028 ஈறு செய்தில கணைமழை இவரொடும் யானே
மாறு கொள்வதுந் தனிமையில் அரிதென வலியோன்
ஊறு சேர்தரு மாயையால் ஒவ்வொர்பூ தர்க்கும்
நூறு நூறுருக் கொண்டுதாக் குற்றனன் நொடிப்பில். 106

2029 ஆய காலையில் துன்முகன் வடிவமும் அடருந்
தீயென னக்கிளா சாரத ரொடுசெருச் செய்யும்
ஏய கொற்றமும் நோக்கினன் விம்மினன் வெகுண்டான்
மாயை கொல்லென உன்னினன் வாகையங் கதிரோன். 107

2030 மாற்று கின்றதெப் படைக்கல மோவென மதியாத்
தேற்று கின்றதோர் போதகப் பெரும்படை செலுத்தக்
காற்றின் முன்னுறு பூளையின் உருவெலாங் கரப்பக்
கூற்ற மன்னதோர் துன்முகன் ஒருவனாய்க் கொதித்தான். 108

2031 கொதித்த துன்முகன் தன்பெருஞ் சிலையினைக் கோட்டி
நுதித்த னிக்கணை ஆயிரம் ஒருதொடை நூக்க
மதித்து வீரன்றன் ஒருபெருஞ் சிலையினை வாங்கிக்
கதித்த நோன்கணை ஆயிரஞ் சிதறினன் கடிதில். 109

2032 ஆயி ரஞ்சரத் தாலவன் விட்டகோல் அறுத்துத்
தீய வன்னிச் சிலையை யேழ் வாளியாற் சிந்தி
மேய சாலிகை தன்னையோர் பகழயால் வீட்டிக்
காயம் எங்கணும் அழுத்தினன் அளவைதீர் கணைகள். 110

2033 வேறு
அழுந்திடு வடிக்கணை யாகம் போழ்தலும்
எழுந்திடு குருதிநீர் இரைத்துச் சென்றிடக்
கொழுந்தழல் புரைவதோர் கொடிய துன்முகன்
விழுந்தனன் மயங்கினன் விளிந்து ளானென. 111

2034 ஊறிய குருதியன் உறுகண் எய்துவான்
தேறினன் ஒல்லையிற் செருவில் நேர்துமேல்
ஈறினி வந்திடும் இரிந்திட் டுய்வதே
ஆறென உன்னினன் அமருக் கஞ்சுவான். 112

2035 சிந்தையின் வழபடல் செய்து மாயையின்
மந்திரம் ஒன்றினை மரப்பின் உன்னுறா
எந்திரத் தேரினும் எழுந்து துன்முகன்
அந்தரத் தாற்றினால் அருவில் போயினான். 113

2036 ஆயின காலையில் அடல்வெம் பூதரில்
தீயினை முருக்குறுஞ் சீற்றத் தோர்சிலர்
மாயையின் வலியினன் வஞ்சன் வல்லையிற்
போயினன் பற்றுதும் போதுவீர் என்றார். 114

2037 ஆங்கது கேட்டிடும் ஆடல் வெய்யவன்
ஈங்கிது தவிருதிர் இகலுக் கஞ்சியே
நீங்கினன் ஒருவனை நெருக்கி ஆருயிர்
வாங்குதல் புகழதோ வலியின் பாலதோ. 115

2038 ஓடினர் தம்மையும் உற்றுத் தாள்மலர்
சூடினர் தம்மையும் தொழுத கையராய்
வாடினர் தம்மையும் வலியி லோரையுஞ்
சாடினர் அல்லரோ நவைக்கட் டங்குவார். 116

2039 வீரரை அல்லரை வெகுள லீரெனப்
பேரடல் வெய்யவன் பேச அன்னது
காரிய மேயெனக் கருத்தில் உன்னியே
சாரதர் தொடர்ந்திடுந் தன்மை நீங்கினார். 117

2040 வேறு
அந்நேர் காணா ஆளரி மாமுக அடல்வெய்யோன்
இன்னே நந்தந் தானைகள் எல்லாம் இரிவாகும்
பின்னே நிற்ற லாவதெ னென்னாப் பெயர்குற்றே
முன்னே சென்றான் பூதரை நோக்கி முனிகின்றான். 118

2041 நந்தா ஆற்றற் சிங்கமு கத்தோன் அவன்நம்முன்
வந்தான் யாமே மாற்றுதும் அன்னான் வலியென்னாக்
கொந்தார் தாருச் சூழலும் வெற்புங் கொண்டேகி
முந்தா நின்ற பூதர்கள் வெம்போர் முயல்கின்றார். 119

2042 மட்டார் தொங்கற் சிங்கமு கன்மேல் மதிதோய்வான்
எட்டா நின்ற வெற்புள யாவும் எறிகின்றார்
விட்டார் தாருச் சூழல் கணிச்சி வீசுற்றார்
தொட்டார் சூலந் தண்டெழு நாஞ்சில் சொரிகின்றார். 120

2043 சொரியுங் காலைத் தீயெழ நோக்கிச் சுடர்வேலோன்
எரியுங் காலுங் கால வுயிர்ப்ப எதிர்செல்லாக்
கரியுந் தீயும் பூழிய தாகுங் ககனத்தே
திரியும் மீளும் மப்படை செய்யுஞ் செயலீதால். 121

2044 அன்னோ அன்னோ நம்படை எல்லாம் அடல்வீரன்
முன்னோ செல்லா தீய வுயிர்ப்பின் முடிவாமால்
பின்னே செய்வ தொன்றிலை யாம்பே ரமர்செய்வ
தென்னோ என்னோ யாரினு மேலான இவனென்றரி. 122

2045 என்றார் பூதர் சீற்றம் விளைத்தார் யாரும்போய்க்
குன்றாய் அங்க ணுற்றன யாவுங் குழுவுற்ற
வன்றா ருக்க ளானவும் மாண்கைக் கொடுதொட்டுச்
சென்றார் ஆர்த்தார் சீயமு கன்மேற் செலவுய்த்தார். 123

2046 வேறு
கைக்கொடு சாரத கணங்கள் ஆர்த்துடன்
உய்க்குறு வரையெலாம் ஒருங்கு சென்றிடாத்
திக்குள வரைப்பெலாஞ் செறிந்து ஞாயிறு
மெய்க்கதிர் வழங்குறும் விசும்பு தூர்த்தவே. 124

2047 கல்லகத் தொகுதிகள் ககனந் தூர்த்துழி
எல்லுடைச் செங்கதிர் இரவி மாய்ந்திட
ஒல்லெனத் திமிரம்வந் துறலும் நோக்கியே
அல்லெனக் குடம்பையுள் அடைவ புள்ளேலாம். 125

2048 வெற்பின நிரத்தலு மறைய வெய்யவன்
எற்படு முன்னரே இரவி ஓடினான்
அற்புதம் அற்புதம் அடைந்த தம்புயன்
கற்பமென் றறிஞருங் கலக்கம் எய்தினார். 126

2049 போற்றலன் தன்மிசைப் பூதர் தூண்டிய
மாற்றரும் பதலைகள் மலிந்து வான்படரி
ஆற்றினை அடைத்தலும் அஞ்சி நின்றனன்
காற்றினும் விரைந்துசெல் கதிரியின் பண்ணவன். 127

2050 இன்று றவுணரால் இடரு ழந்தனம்
அன்றியும் பூதரீண் டடுககல் வீசினார்
நின்றிடின் வருந்துதும் நிகழ்ச்சி தேரலாஞ்
சென்றிடல் துணிவெனத் தேவர் ஓடினார். 128

2051 செருவலி வீரர்கள் செலுத்தச் சேண்படரி
பருவரை யிடையிடை பயின்று சுற்றிய
கருமுகில் உண்டநீர் கான்று தம்வயின்
உருமிடி எங்கணும் உகுத்து வீழ்ந்தவே. 129

2052 வெதிர்படு சிலம்பினும் வழுக்கி வீழ்ந்திடும்
அதிர்குரல் அரியினம்அண்டச் செற்றின
எதிருறு தகுவனை இனமென் றுன்னியே
முதிர்தரு காதலான் முன்னுற் றாலென. 130

2053 மைம்மலை யிடைவிராய் வதிந்த மோட்டுடைக்
கைம்மலை அரற்றியே கவிழ்வ காசிபன்
செம்மலை அரியென நோக்கித் தேம்பியே
விம்மலை யெய்தியே வீழவ தென்னவே. 131

2054 பொற்றையின் மரங்களிற் பொதிந்த கேசரம்
வெற்றிகொள் அரிமுகன் தொடையின் மேவின
விற்றவர் தம்மை விட்டேதி லார்தமைப்
பற்றொடு கலந்திடு பரத்தை மாதர்போல். 132

2055 எறிந்திடு வரைகள்தந் தம்மில் எற்றிடச்
செறிந்திடு தீங்கனல் சென்ற திக்கெலாம்
பொறிந்தன புகைந்தன பொரித லுற்றன
மறிந்தன உலந்தன மன்னு யிர்த்தொகை. 133

2056 ஆயின பல்லியல் அடையப் பூதர்கள்
ஏயின குன்றமுந் தருவும் ஏகியே
சீயமா முகமுடைச் செல்வற் சேர்ந்தனன்
தூயவன் கயிலைச் சூழ்ந்த கொண்டல்போல். 134

2057 செடித்தலை எயினரில் திகழும் ஆயிரம்
முடித்தலை யான்மிசைப் பட்ட மொய்வரை
பொடித்தில இற்றில பூழி யாய்த்தில
படித்தலம் வீழ்ந்தன நொய்ய பான்மையால். 135

2058 வேறு
துன்னற் பட்ட குன்றெவை யுஞ்சூர் துணையானோன்
மின்னற் பட்ட மெய்யிடை பட்டே வெற்பின்கட்
பன்னற் பட்ட தாமென வீழ்கின் றதுபாரா
இன்னற் பட்டார் பூதர்கள் வானோர் ஏங்குற்றார். 136

2059 சீலம் புக்க பா[illegible]டர் வெம்போர் செயல்கா ணூஉக்
கோலம் புக்க தேரிடை நின்றான் குப்புற்று
ஞாலம் புக்கான் பூதர்கள் தம்மை நலிதற்கோர்
ஆலம் புக்கா லென்ன நடந்தான் அடல்செய்வான். 137

2060 பார்மேல் எற்றுஞ் சிற்சிலர் தம்மைப் பகைவிண்ணோரி
ஊர்மேல் எற்றுஞ் சிற்சிலர் தம்மை உயர்பானுத்
தேர்மேல் எற்றுஞ் சிற்சிலர் தம்மைத் திரைசேர்முந்
நீர்மேல் எற்றுஞ் சிற்சிலர் தம்மை நெடிதோச்சும். 138

2061 பற்றா நிற்குஞ் சிலவரை மூரற் பகுவாயிற்
குற்றா நிற்குஞ் சிலவரை வாரிக் குழுவோடுஞ்
சுற்றா நிற்குஞ் சிலவரை அண்டச் சுவரின்கண்
எற்றா நிற்குஞ் சிலவரை அள்ளி எறிகிற்கும். 139

2062 புண்டரி கன்கட் சிலவரை வீசும் பொருசெங்கைத்
தண்டத ரன்கட் சிலவரை வீசுஞ் சதவேள்வி
அண்டம தன்கட் சலவரை வீசும் அகிலஞ்சூழ்
எண்டிசை யின்கட் சிலவரை வீசும் இகல்பேசும். 140

2063 மாலெரி வைப்பிற் பலர்தமை வீசும் வானத்தில்
காலெறி வைப்பிற் பலர்தமை வீசும் கரைதீர்ந்த

வேலைகள் முற்றும் பலர்தமை வீசும் வியன்மிக்க
ஞாலம் அனைத்தும் பலர்தமை வீசும் நனிதூர்க்கும். 141

2064 சிங்கங் கொண்ட மாமுகன் வீசுஞ் செறிவாலே
துங்கங் கொண்ட பார்முதல் விண்ணின் துணையுந்தான்
எங்கும் பூத மாயின அம்ம இதுகொண்டோ
அங்கங் கெல்லாம் பூதம தென்றார் அறிவுள்ளார். 142

2065 மிதித்துக் கொல்லுஞ் சிற்சிலர் தம்மை மிசையுந்திப்
பதத்திற் கொல்லுஞ் சிற்சிலர் தம்மைப் படிவத்தைச்
சிதைத்துக் கொல்லுஞ் சிற்சிலர் தம்மைச் செல்லென்ன
உதைத்துக் கொல்லுஞ் சிற்சிலா தம்மை உலவுற்றே. 143

2066 விள்ளா நிற்குஞ் சிற்சிலர் சென்னி விரல்மேலால்
தள்ளா நிற்குஞ் சிற்சிலர் சென்னி தாமுற்றக்
கிள்ளா நிற்குஞ் சிற்சிலர் சென்னி கிளையோடு
மள்ளா நிற்குஞ் சிற்சிலர் சென்னி அடுகிற்கும். 144

2067 தாக்கிற் கொல்லும் ஒருசிலர் தம்மைத் தடிகின்ற
ஊக்கிற் கொல்லும் ஒருசிலர் தம்மை யுருமொத்த
வாக்கிற் கொல்லும் ஒருசிலர் தம்மை மருளுற்ற
நோக்கிற் கொல்லும் ஒருசிலர் தம்மை நொடிதன்னில். 145

2068 வாரா நிற்கும் பாரிட ராசியை வாரிப்பின்
சேரா நிற்கும் வாய்தொறும் ஈண்டச் சேர்த்திட்டே
ஆரா நிற்கும் ஆர்ந்தபி னாக அகல்மோடடைத்
தூரா நிற்குந் தூர்த்தபின் ஆடல் தொழில்செய்யும். 146

2069 எழுவிற் கொல்லும் ஒருசிலர் தம்மை எரிகூர்வாய்
மழுவிற் கொல்லும் ஒருசிலர் தம்மை வயநாஞ்சில்
கொழுவிற் கொல்லும் ஒருசிலர் தம்மை கூர்சூலக்
கழுவிற் கொல்லும் ஒருசிலர் தம்மைக் கடிதோடி. 147

2070 கரத்திற் கொல்லுஞ் சிலவரை நோன்கார் முகமுய்க்குஞ்
சரத்திற் கொல்லுஞ் சிலவரை அம்பொற் றண்டத்தின்
உரத்திற் கொல்லுஞ் சிலவரை அங்கண் ஒசிக்கின்ற
மரத்திற் கொல்லுஞ் சிலவரை மண்மீ தினில்வீட்டும். 148

2071 தேர்மே லானோ விண்ணுல கானோ திசையானோ
பார்மே லானோ வார்கட லானோ பதுமத்தோன்
ஊர்மே லானோ மேருவி னானோ உயர்பூதர்
போர்மே லானோ தீயவன் என்றார் புலவோகள். 149

2072 அற்றார் தாள்கள் கைகள் இழந்தார் அடுதிண்டோன்
இற்றார் சென்னி சிந்தின துண்ட மிலரானார்

பெற்றார் மார்பம் விண்டனர் வீழ்ந்து புரள்கின்றார்
செற்றார் தம்மை அட்டிடு பூதத் திறல்வீரர். 150

2073 சொரியா நின்ற சோரியர் ஆற்றத் துயர்மேலார்
மரியா நின்றார் எண்ணில ரால்மற் றவர்தம்முட்
பிரியா நின்ற சென்னியர் பல்லோர் பெயர்வெய்தித்
திரியா நின்றரி ஆடுறு கின்ற செயல்கொண்டார். 151

2074 கருவந் தெய்தும் ஆருயிர் முற்றுங் கவிழ்கின்ற
பருவந் தன்னில் தீயவன் உண்ணும் படியேபோற்
செருவந் துற்ற சீயமு கத்துத் திறல்மேலோன்
ஒருவன் தானே நின்றடு கின்றான் உலவாதான். 152

2075 அந்நீ ராகிப் பூதரை வெய்யோன் அடுகாலைச்
செந்நீர் நீத்தம் ஆயிடை தோறுஞ் சென்றீண்டித்
தொன்னீர் வேலை புக்குவர் நீக்கித் துவராக்கி
முந்நீ ரென்னுந் தொன்மையை வேறாய் முடிவித்த. 153

2076 ஆடா நின்றான் இத்திறம் வெய்யோன் அளவில்லரி
வீடா நின்றார் கண்டனர் வெம்பூ தர்க்கெல்லாங்
கேடா நின்றான் இங்கிவ னென்னாக் கிளையோடும்
ஓடா நின்றா[illegible] வானவ ரெல்லாம் உலைவுற்றார். 154

2077 துன்னா நின்ற தொன்மரம் வெற்பின் தொகைவீசி
முன்னா குற்ற பூதர்கள் யாரும் முடிகாகக்
கொன்னார் சிங்க மாமுகன் அட்டே குலவுற்று
மின்னார் செம்பொன் மேருவெ னுந்தேர் மிசைபுக்கான். 155

2078 வேறு
அவ்வேலை யன்னான் அமர்செய்விளை யாடல் பாரா
மைவேலை போல்வான் அழற்கண்ணன் மனங்க னன்று
செவ்வே யெதிர்புக் கரிமாமுகற் சீறி வெய்யோய்
இவ்வேலை உன்னை முடிப்பன்இகல் முற்றி என்றான். 156

2079 என்றங்குரை செய்திடு பூதனை ஏந்தல் நோக்கி
ஒன்றுஞ்சிறி துன்னலை அச்சமும் முற்றி லாதாய்
நின்றிங்கிது கூறினை என்னின் நினக்கு நேரார்
நன்றுன்வலி என்றுந கைத்தனன் நாகர் அஞ்ச. 157

2080 அன்னான்நகை செய்தது காண்டலும் ஆழி நாப்பட்
கொன்னார்தழ லென்னவெ குண்டனன் கூளி வேந்தன்
நின்னாடலை நீக்குவன் காணுதி நீயு மென்றோர்
மின்னார்கழு முட்படை ஆங்கவன் மீது விட்டான். 158

2081 கூற்றானவன் ஏவவ ரும்படைக் கொள்கை நோக்கி
மாற்றானவ னோர்படை யும்வழங் காது நின்றான்

தோற்றானென வானவர் ஆர்த்தனர் சூல மார்பின்
ஏற்றான்வரை மேற்படு கண்டகத் திற்ற தன்றே. 159

2082 உறுகின்றசூ லப்படை ஊற்றமும் ஓங்கல் மார்பத்
திறுகின்றதும் அங்கவன நின்றதும் யாவும் நோக்கிப்
பெறுகின் றவரில் இவன்பெற்றது பேற தென்னா
மறுகின்ற நெஞ்சன் ஒருதண்டினை வல்லை உய்த்தான். 160

2083 வேறு
உய்த்தலும் அனையதண் டுருமுற் றாலென
அத்தலை அரிமுகத் தவுணன் சாரதி
மெய்த்தலை கோடலும் வெகுண்டு நோக்கியே
கைத்தல மிருந்ததோர் கதையை ஏவினான். 161

2084 மாவலி சேர்தரு மடங்கல் மாமுகன்
ஏவிய வெங்கதை இமைப்பிற் பூதர்கள்
காவலன் அகலமேற் கலந்து தாக்கிற்றால்
ஓவென அனையனும் உளம்வ ருந்தவே. 162

2085 செயிரறத் திருத்திய செம்பொற் குன்றின்மேல்
வயிரமெய்ப் படையது வந்தற் றாதலும்
அயிருறப் புனைகலன் ஆகங் கீண்டிட
உயிரினுக் கவ்வழி யுலைவு மிக்கதே. 163

2086 தாக்கிய வேலையில் தழலின் நாட்டத்தான்
மூக்கினின் மார்பினின் முழங்கு வாயினிற்
தேக்கிய குருதிநீர் சிந்து கின்றது
மேக்குயர் கனல்மழை விரித்த தாரைபோல். 164

2087 மறந்தனன் தொல்லுணர் வெனினும் வன்றிறல்
துறந்திலன் வெவ்வழல் சொரியுங் கண்ணினான்
சிறந்திடும் ஊசலில் திரிந்த தன்னுயிர்
இறந்திலன் அவற்கொரு கூற்றம் இன்மையால். 165

2088 ஆரழன் முகத்தவன் அயர்வுற் றவ்வழிச்
சோர்வொடு நிற்றலுஞ் சூரன் பின்வரும்
வீரம துடையவன் வேறொர் பாகனைத்
தேரிடை நிறுவினன் சேறல் மேயினான். 166

2089 வேறு
மூண்டமர் இயற்றச் சீய முகத்தவன் வரலும் நோக்கித்
தூண்டிய வெகுளி மேலோன் சுமாலியென் றுரைக்குந் தொல்லோன்
நீண்டிடு மேரு வென்ன நிவந்ததோர் அடுக்கல் தன்னைக்
கீண்டரி முகன்மேற் செல்லக் கிளர்ந்தனன் வீசி ஆர்த்தான். 167

2090 மற்றவன் விடுத்த குன்றை வாளரி முகத்து வீரன்
பற்றினன் ஒருதன் கையால் பந்தென மீட்டும் உந்தப்
பொற்றட மார்பில் தாக்கப் புலம்பியே சுமாலி என்பான்
செற்றமும் தானு மாகச் செயலற்று நிலத்தன் ஆனான். 168

2091 நிலந்தனில் சுமாலி வீ[illegible] நெடுஞ்சினம் திருகி அங்கைத்
தலந்தனில் கரையொன் றேந்தித் தண்டிபோய் அவுணன் தோ[illegible]ல்
கலந்தவன் உரத்தில் செல்லப் புடைத்தலும் காமந் தன்னில்
புலந்தவன் தனக்குக் காட்டும் உணர்வெனப் பொடித்த தன்றே. 169

2092 பொடித்தலும் வயிரத் தண்டம் பூதரின் முதல்வன் பொங்கிக்
கொடித்தடந் தேர்மேல் நின்ற கோளரி முகத்தன் தன்மேல்
இடித்தெனக் கையால் எற்ற எரியெழ நகைத்துத் தன்னோர்
அடித்தலங் கொண்டு தள்ளி அமரர்கள் வெருவ ஆர்த்தான். 170

2093 தாளினால் உந்தி விட்ட தண்டிசேண் எழுந்து மெல்ல
மீளுவான் அடுவ னென்னும் வெகுளியான் உயிர்ப்பு வீங்கி
யாளிசேர் வதனத் தண்ணல் ஆடக வயிரக் குன்றத்
தோளின்மேல் குப்புற் றேதன் னடிகொடு துகைக்கல் உற்றான். 172

2094 ஆடியல் தானை மன்னன் ஆயிரத் திரட்டி தோளும்
ஓடினன் துகைத்துத் தாளும் ஓய்ந்தனன் அவற்றை நோக்கி
நாடினன் திரியா நின்றான் நாகநீள் குடுமிக் குன்றில்
கோடுயர் பொதும்பர் தன்னிற் பாய்ந்திடும் குரங்கு போல்வான். 172

2095 குரங்குளைக் குடுமிச் சூட்டுக் கோளரி முகத்து வெய்யோன்
கரங்களிற் பாயும் அங்கட் கலந்திடு படையிற் பாயுஞ்
சிரங்களிற் பாயும் மீளச் செவிதொறும் பாயும் பூந்தண்
மரங்களிற் பாய்ந்து செல்லும் மணிச்சிறை வண்டும் போன்றான். 173

2096 செறிந்திடு கரமுந் தோளுஞ் சென்னியும் பூதன் செல்வ
தறிந்திலன் சிறியன் போலும் அரிமுகத் தவுணன் நம்மேல்
எறிந்துல வுற்றுச் சூழும் ஈகொலென் றொருதன் கையால்
சொறிந்தனன் சிறிது பின்னர்த் தண்டியைத் துடைத்து விட்டான். 174

2097 ஒருதனிக் கரத்தால் தீயோன் உருட்டினன் துடைப்பத் தண்டி
பெரிதுநொந் தாற்றல் போகிப் பின்றினன் பெயர்ந்து போனான்
தெரிதரு பூதர் அஞ்சித் சிந்திச் செயலொன் றில்லார்
அரிதுசெய் தவமே அல்லால் ஆற்றல்பெற் றிடுவ துண்டோ. 175

2098 பூதர்கள் இரிவு நோக்கிப் பொருதிறல் இலக்கத் தெட்டு
மேதகு வீரர் யாரும் வெய்யதேர் கடாவிச் சென்று
தீதறு சிலைகள் வாங்கிச் சீயமா முகவற் சுற்றித்
தாதவிழ் மலர்பெய் தென்னச் சரமழை பொழிதல் உற்றார். 176

2099 பொழிந்திடு பகழி யெல்லாம் புகுந்திடு சுவடின் நாகி
அழிந்ததும் இன்றி முன்போல் அவன்புடை வீழ நோக்கி
ஒழிந்ததெம் மாற்ற லென்னா உட்கினர் ஒருதன் தேரின்
இழிந்தனன் அவுணர் கோமான் இடிபடத தெழித்துச் சென்றான். 177

2100 எடுத்தனன் சிலவர் தேரை எறிந்தனன் ஒன்றொ டொன்றின்
அடித்தனன் சிலவர் தேரை அள்ளினன் அங்கை தன்னால்
ஒடித்தனன் சிலவர் தேரை உரைத்தனன் சிலவர் தேரைப்
பொடித்தனன் சிலவர் தேரைப் புதைத்தனன் சிலவர் தேரை. 178

2101 இத்திற மடங்கல் வீரன் அடுதலும் இலக்கத் தெண்மர்
தத்தம துயிரே தாங்கித் தனுவொடு படைகள் மானம்
மெய்த்திறல் சிந்திச் சாய்ந்தார் மேவலன் தேர்மேற் புக்கான்
அத்தலை நின்ற வீர வாகுமற் றதனைக் கண்டான். 179

2102 ஆளரி அனைய வீரன் அதுகண்டு பூதர் தம்முட்
கோளரி முகத்து வெய்யோன் கொன்றதோர் பாதி உண்டால்
தாளுடை வில்லி னாருஞ் சமரிடத் தழிந்தார் இந்த
நாளினின் முடியும் போலும் நம்பெரும் படையு மென்றான். 180

2103 அடல்பெறு புயத்து வள்ளல் ஆடக வரைபோ லுள்ள
கோடுமர மான தொன்றைக் கோட்டினன் சினமேற் கொண்டான்
விடமுறு தறுகட் கேது விரைந்தொரு பாங்கரி புக்கு
நடுவெலாங் கவரத் தோன்று நாகிளங் கதிரே போல. 181

2104 வாங்கிய சிலையிற் பூட்டி வடிக்கணை அநந்த கோடி
தூங்கலின் மழைகான் றென்ன உலப்புறான் சொரிந்து நிற்ப
ஆங்கெதிர் அடர்த்துப் போர்செய் அவுணர்தந் தலைகள் பாறத்
தாங்கிய படைகள் சிந்தித் தரைமிசைத் துணிந்து வீழ்ந்தார். 182

2105 பரித்தொகை முழுதும் பட்ட பாழியந் தோ□கள் பட்ட
ஒருத்தலும் பிடியும் பட்ட உலப்பிலா அவுணர் பட்டார்
பெருத்தன பிணத்தின் குன்றம் பிறங்கின பேய்கள் மொய்த்த
திரைத்தெழு சோரி நீத்தந் தெண்டிரை மடுத்த தம்மா. 183

2106 தேரெனப் பட்ட வீரர் திறமெனப் பட்ட மாவின்
பேரெனப் பட்ட யானைப் பெருக்கெனப் பட்ட தம்முட்
பேரிடைப் படாத எல்லாம் பொருதிரைக் குருதி வாரி
வீரனுக் குதவி யாக வேலையுள் உய்த்த தன்றே. 184

2107 பேரியின் ஒலியும் தீய அவுணர்கள் பிடித்த வில்லின்
நாரியின் ஒலியும் சூழும் நாற்படை ஒலியும் மாண்ட
காரியின் ஒலியும் மோட்டுக் கணங்களின் ஒலியுஞ் செந்நீ□□
வாரியின் ஒலியு மாகி அடுகளம் மலிந்த அன்றே. 185

2108 மலைகளை அறுக்கும் வேலை வாள்களை அறுக்குஞ் செங்கைச்
சிலைகளை அறுக்கும் வெய்யோர் திண்டிறல் கொண்ட தோளின்
நிலைகளை அறுக்கும் மார்பின் நிரைகளை அறுக்குங் கோடி
தலைகளை அறுக்கும் அம்மா இளையவன் சரம தொன்றே. 186

2109 காழுறும் அவுணர் சென்னி கரதல நெடுந்தோள் மார்பகம்
வாழிய முருகன் தூதன் வாளிகள் வெளவி ஏகி
ஏழுள கடலும் நீங்கி எண்டிசைக் கிரிகள் தாவி
ஆழியங் கிரிபோழந் தப்பால் அண்டமும் பிளந்து செல்லும். 187

2110 கரண்டம தான செந்நீர் ஆற்றிடைக் கவிழ்ந்து மூழ்கித்
திரண்டவூன் வெளவி மீண்டு சிறகரை உதறு கின்ற
முரண்டகு வீரர் சென்னி மூளைபுக் களைந்து வாரிக்
குரண்டமீ தென்ன லான கருநிறக் கொடிக ளெல்லாம். 188

2111 இவ்வஆஆ அவுணர் தானை இறந்திட வீர வாகு
அவ்வயின் நின்று சென்றாங் கடுதலும் அதனைக் கண்டார்
தெவ்வரை முருக்கும் வைவேற் சீயமா முகத்தன் மைந்தர்
ஐவரை வெல்லும் ஆற்றல் ஐம்பதிற் றிருவா என்பார். 189

2112 சினத்தனர் இதழைப் பல்லால் தின்றனர் நம்முன் வெம்போர்
வினைத்தொழில் இயற்று வானை வெய்தென அடுது மென்னா
இனத்தொடு தேர்க டாவி ஏகியே வீரன் தன்மேல்
தனித்தனி வார்விற் கோட்டிச் சரமழை சிதற லுற்றார். 190

2113 நூற்றுவர் ஒருங்கு நேர்ந்து நோன்றலைச் சிலைகள் வாங்கி
மேற்றிகழ் முகில்கான் றென்ன வீசிய விசிகந் தன்னை
ஆற்றல்சேர் வீரன் காணா அயிற்கணை அநந்த கோடி
காற்றெனத் துரந்து மாற்றிக் கடவுளர் புகழ ஆர்த்தான். 191

2114 தொலைவுறும் அவுணன் மைந்தா துண்ணெனக் கனன்று பின்னுங்
கொலையுடை நெடுங்கூர் வாளி கோடிகோ டிகள்நின் றுய்ப்ப
வலியுடை வீர வாகு மற்றவை மாற்றி அன்னோர்
சிலையொடு தேர்கள் தம்மைச் செஞ்சரந் தூண்டி வீழ்த்தான். 192

2115 தேரொடு சிலைகள் மாயச் சீயமா முகத்தன் மைந்தர்
வீரனை எதிர்ந்து வில்லால் வென்றிடல் அரிது போலுங்
கூருடை நுதிவாட் போரிற் கொல்லுதும் இவனை என்னாப்
பாரிடை வந்தோர் சூழ்ச்சி வகையினாற் பகர்த லுற்றார். 193

2116 காட்புடைச் சிலையின் விஞ்சை கற்றதே அன்றி எம்போல்
வாட்படை பயின்றி லாய்கொல் வல்லையேல் அப்போர் செய்யச்
சேட்படை யன்றி எம்முன் சேர்தியால் வீர என்னாத்
தோட்புடை கொட்டி ஆர்த்தார் கூற்றனுந் துளக்கம் எய்த. 194

2117 வன்றிறல் அவுணன் மைந்தர் உரையினை வள்ளல் கேளா
நன்றிது புகன்றீர் என்னா நகைசெய்து நாதன் தந்த
மின்றிகழ் சுடர்வாள் கொண்டு விரைந்துகீழ்த் தலத்திற் பாய்ந்து
சென்றனன் அதனை நோக்கித் தேவரும் இடுக்கண் செய்தார். 195

2118 வார்ந்திடு கழற்கால் வீரன் வாள்கொடு வரலும் நோக்கித்
தீர்ந்தனன் ஆவி இன்னே செகுக்கலாம் இவனை யென்னாக்
கூர்ந்திடு நாந்த கங்கள் தனித்தனி கொண்டு சென்று
நேர்ந்தனர் வளைந்து கொண்டார் மதியைச்சூழ் நிசியை ஒப்பார். 196

2119 வளைந்தனர் வீரன் தோளின் மார்பினிற் கரத்தின் மொய்ம்பிற்
களந்தனிற் சென்னி தன்னிற் கருதினர் இலக்கம் நாடிக்
கிளர்ந்திடு நாந்த கத்தாற் கிட்டினர் எறித லோடும்
உளந்தளர் வில்லோன் மேனிக் குற்றில சிறிதும் ஊறு. 197

2120 ஊறிலாத் தன்மை நோக்கி உவனையாம் பற்றி மெல்லக்
கோறலே கரும மென்னாக் குழுவொடும் அவனைப் புல்லச்
சீறினான் தன்வா ளோச்சிச் சிறிதுமெய் தெரியா வண்ணம்
நூறினான் கொல்லோ என்ன நூற்றுவரி தமையும் அட்டான். 198

2121 அட்டிடு கின்ற வீரன் அமரர்கள் வழுத்த மீண்டு
தட்டுடை நெடுந்தேர் புக்கான் தன்மனக் கினிய மைந்தர்
பட்டிடு தன்மை நோக்கிப் பாடுறும் அவுணர் கோமான்
மட்டறு துயரின் மூழ்கி மானத்தால் இரக்க முற்றான். 199

2122 கோளுண்ட அரிமான் துப்பில் குமரரை ஒருவன் கொண்ட
வாளுண்ட தென்று நெஞ்சம் வசையுண்டு வருந்தல் மன்னோ
தாளுண்டு பரித்து நிற்கத் தலைகளுண் டெண்ணி லாத
தோளுண்டு கரங்க ளுண்டு சுமக்கலாம் போலு மன்றே. 200

2123 என்னுடை மைந்தர் தம்மை யாவருங் காண ஈண்டென்
முன்னுற ஒருவ னோதான் முடித்துயிர் கொண்டு நிற்பான்
பின்னினி இதற்கு மேலும் பெற்றிடும் வசையொன் றுண்டோ
ஒன்னலர் தங்கட் கெல்லாம் ஒருநகை விளைத்தேன் அன்றோ. 201

2124 பொன்றினர் தம்மை உன்னிப் பொருமியே புன்கண் எய்தி
நின்றிடின் ஆவ துண்டோ நேரலர் தொகுதி எல்லாங்
கொண்றொரு கணத்தின் முன்னர்க் குழுவொடும் வாரி வாரித்
தின்றுதேக் கிட்டால் அன்றித் தீருமோ எனது சீற்றம். 202

2125 மேவல ராகும் இன்னோர் குழுவினை விரைவின் அட்டுத்
தாவறு சுடர்வேல் கொண்ட பாலகன் தனையும் வென்று
தேவர்கள் எனப்பேர் பெற்றோர் யாரையும் இன்றே செற்று
மூவுல கினையும் யானே முடிக்குவன் விரைவின் என்றான். 203

2126 என்னஇத் திறங்கள் பன்னி எரியுமெய் விதிர்ப்பச் சீறித்
தன்னுறு தடந்தேர் உய்க்குஞ் சாரதி தன்னை நோக்கிக்
கொன்னுனை அயில்வாட் செங்கைக் குமரர்தங் குழுவைக் கொன்றான்
முன்றுக் கடவு கென்ன நன்றிது முதல்வ என்றான். 204

2127 பாகுநூல் உணர்ந்து வல்லோன் பரியினை எழுப்பிப் பண்ணி
மாகநீ டடந்தேர் தூண்ட அரிமுகன் வருத லோடும்
ஏகநா யகனாம் மூர்த்தி ஏவலான் அதனை நோக்கி
ஓகையால் தனது மான்தேர் அதனொடும் ஒல்லை நேர்ந்தான். 205

2128 நேரிந்திடு கின்ற காலை நிரைபடு விழிக டோறுஞ்
சார்ந்தழல் சிதற நோக்கித் தளைபடு தறுகட் சீயம்
ஆர்ந்திடு பகைகண் டென்ன ஆற்றவுஞ் சினமீக் கொண்டு
சேர்ந்திடு வானை நோக்கிச் சிங்கமா முகத்தன் சொல்வான். 206

2129 ஆதிதந் தருளும் மைந்தன் அறுமுகன் அவன்நீ அல்லை
ஏதிலா இலக்க ரென்றே இசைத்திடு வோர்கள் தம்முள்
நாதனோ எண்மர் தம்முள் ஒருவனோ நம்மூர் வந்த
தூதனோ இனையர் தம்முள் யாரைநீ சொல்லு கென்றான். 207

2130 அல்லுறழ் கண்டன் தந்த அறுமுகற் கடிய னானேன்
தொல்லைநும் மூதூர் அட்டுத் தூதனு மாகி மீண்டேன்
எல்லையின் நுமரை யெல்லாம் ஈண்டொரு கணத்தின் அட்டு
வெல்லுவ தமைந்து நின்றேன் வீரவா கென்போ என்றார். 208

2131 வேறு
திண்டிறற் சேவகன் செப்பும் இம்மொழி
விண்டிடு செவிதொறும் விடம்பெய் தாலெனக்
கொண்டனன் வெகுண்டொரு கூற்றங் கூறினான்
உண்டிடும் அசனின் உமிழ்ந்திட் டாலென. 209

2132 உறுபடை உழப்பினை உணர்கு றாததோர்
சிறுவரை வெல்வதுந் திருந்து மாநகர்
உரைதரும் எளியரை உடன்று கொல்வதும்
அறிகுறி ஈதுமோர் ஆண்மைப் பாலதோ. 210

2133 நூற்றியற் குமரரை நொய்திற் கொன்றநின்
ஆற்றலைக் கெடுக்குவன் ஆவி வாங்கியே
கூற்றுவற் குண்டியாக் கொடுப்பன் மெய்யினைப்
பாற்றினுக் குதவுவன் பாலவன் காணவே. 211

2134 உன்னுடை வன்மையும் உனது நாயகன்
தன்னுடை வன்மையுந் தானை வன்மையும்
பின்னுடை அமரர்கள் பெற்ற வன்மையும்
என்னுடை வன்மையால் இறையின் நீக்கவேன். 212

2135 வானவர் சிறையினை மாற்ற உன்னியே
தானையொ டேகியென் றன்முன் எய்தின்நீர்
ஊனுயிர் வாழ்க்கையும் ஒல்லை தீர்திரால்
ஆனதொ ரூதியம் அழகி தாற்றவே. 213

2136 மூண்டதொல் விதியினான் முடிந்த மன்னுயிர்
ஈண்டுதம் மியாக்கையுள் மேவும் என்னினும்
ஈண்டெனை மாறுகொண் டிகல்செய் கின்றவர்
மாண்டிடும் ஆறலால் மற்றும் உய்வரோ. 214

2137 என்பதை அரிமுகன் இயம்ப எம்பிரான்
நன்பெருந் தூதுவன் நகைசெய் தங்கையின்
மன்பெருஞ் சிலையினை வணக்கி வாளியோர்
ஒன்பதொ டொன்பதை உரத்தில் தூண்டினான். 215

2138 விரைந்திடு செலவினால் விசிகம் ஏவலான்
உரந்தனிற் படுதலும் ஒசிந்து வீழ்ந்தன
இரந்திடு தொழிலவர் இன்மை யாளர்போல்
கரந்தவர் இயற்கையைக் கருதி மீள்வபோல். 216

2139 முருகன தேவலால் முன்னம் விட்டிடு
பொருகணை அகலமேற் புகாது வீழ்தலும்
அரிகெழு முகமுடை அவுணர் நாயகன்
கரமிசை இருந்ததோர் கதையொன் றேவினான். 217

2140 ஏவிய தண்டினை ஏந்தல் ஈரிரு
தூவயில் வாளியால் துண்டஞ் செய்திடா
ஓவரும் பான்மையால் ஓராயிர ரங்கணை
தேவரை அலைத்தவன் சிரத்தில் ஓச்சினான். 218

2141 சிரம்படு கின்றதோர் செய்ய வாளிகள்
பரம்படு பலதுணி பட்டு வீழ்ந்தன
உரம்படும் அவுணர்கள் உறைதற் கொத்தமுப்
புரம்படு கின்றதோர் பூழி யாமென. 219

2142 பொன்றிகழ் வடிக்கணை பொடிப்ப இன்னமுன்
நின்றமர் புரியுமோ நென்னல் தூதுவன்
நன்றென அரிமுகன் நகைத்துத் தன்கையின்
மின்றிகழ சூலவேல் திரித்து வீசினான். 220

2143 காசினி எரிகிளர் காட்சித் தாலென
ஆசினி தனில்வரு சூலத் தாற்றலுந்
தேசுடை நிலைமையுந் திறலும் நோக்கியே
வீசினன் எதிருற விசிகம் ஆயிரம். 221

2144 நெட்டிலைச் சூலவேல் நிமலற் கன்பினோன்
விட்டிடு பகழியை வீட்டி மேற்செலப்
பட்டது நோக்கினன் பரிந்து பின்னருந்
தொட்டனன் ஆயிரஞ் சுடர்கொள் வான்கணை. 222

2145 ஏவிய எல்லையில் எதிரும் வாளியைத்
தூவுறு கொன்னுனைச் சூலஞ் சிந்தியே
மேவலர் பரவுறும் வீர வாகுமேல்
தேவரும் மருளுறக் கடிது சென்றதே. 223

2146 இலக்கரும் நங்கினர் எண்மர் ஏங்கியே
கலக்கம தடைந்தனர் கணங்கள் யாவரும்
இலக்கணுற் றிரங்கினர் அமரர் இப்படை
விலக்கரி தேகொலென் றுயிர்த்து விம்மினார். 224

2147 வேறு
கோள்கொண்ட பகழிகளின் கொலைகொண்டு நிலைகொண்ட
தோள்கொண்டு செல்லவருஞ் சூலத்தின் திறல்நோக்கி
நீள்கொண்டல் அன்னதொரு நீலமிடற் றவன்தந்த
வாள்கொண்டு குறைத்திட்டான் வலிகொண்ட தகலாதான். 225

2148 சூலம்போய் இற்றிடலுந் துணைவர்களாய் உள்ளோரும்
ஞாலஞ்சேர் பூதர்களும் நனிமகிழ்வு விறந்தனரால்
ஆலம்போந் தடாத்திடலும் அமலனுண்டு தமைக்காத்த
காலம்போல் அமரரெலாந் துயரம்போய்க் களிசிறந்தார். 226

2149 அக்காலை வெள்ளிமலை அளிக்குநந்தி கணத்திறைவன்
மெய்க்கால வடவையினும் வெகுளியுறு பெற்றியனாய்
இக்காலை இவனுயிரை யானேஉண் குவனென்னா
மைக்காலன் றனைமுடித்த வள்ளல்தனிப் படைகொண்டான். 227

2150 எந்திரித்த இருக்கைதனில் இருத்தியே கருவிகளான்
மந்திரத்தின் விதிமுறையின் மனப்படுபூ சனைஇயற்றி
அந்தரத்தில் இமையவர்க்கும் அரியயற்கும் வெலற்கரிய
சுந்தரத்தோள் அரிமுகனை அடுதியெனத் தொழுதுய்த்தான். 228

2151 உய்ப்பதொரு படையழல்கான் றுலகம்வெருக் கொள்வரலும்
எப்படையோ இஃதென்றான் இமையவர்தம் படைவென்றான்
துப்படையுஞ் செஞ்சடிலத் தோன்றல்படை எனத்தெரியா
அப்படையோ அடுவதென அண்டம்வெடி படநகைத்தான். 229

2152 அற்பட்ட புலனுடைய அரிமுகத்தன் தான்நோற்று
முற்பட்ட பகற்கொண்ட முக்கணான் தனதுபடை
எற்பட்ட மணிக்கடகத் தொருகரத்தில் இருந்ததனைச்
சொற்பட்ட மந்திரத்தால் வழிபட்டுத் தூண்டினனால். 230

2153 தூண்டலுறு பரன்படையுந் தொல்லைவரும் அப்படையும்
ஈண்டியெதி ரெதிர்துன்னி இணைகொண்டோர் இருதலைவர்
காண்டகைய கேண்மையினாற் கடிதுவந்து கலந்தேபின்
மீண்டிடுவ தேபோல விடுத்தவர்பால் மேவினவால். 231

2154 வேறு
தன்படை மீடலுஞ் சயங்கொள் மொய்ம்பினான்
துன்புடை மனத்தனாய்ச் சூரன் என்பவன்
பின்புடை யானொடு பேசப் பின்னொரு
முன்புடை யாரிலை என்று முன்னினான். 232

2155 ஆற்றலிற் குறைவிலன் அழிவு றாதமர்
பேற்றினிற் குறைவிலன் பிறரை அட்டிடு
கூற்றினிற் குறைவிலன் கோடி கூற்றுவர்
ஏற்றெதிர் மலையினும் இமைப்பிற் கொல்வனால். 233

2156 அவன்பெரு முயற்சியே ஆற்ற லாம்என்கோ
தவங்களின் வன்மையே வன்மை தான்என்கோ
சிவன்புரி வரமதே சீரி தால்என்கோ
எவன்பெரி தென்றியான் இசைக்க வல்லனே. 234

2157 விடலுறு பகழியான் மெய்யில் ஊறிலான்
அடலுறு படையினும் அழிவு பெற்றிலான்
கொடியதோர் அரிமுகன் குமரன் செங்கையிற்
படைகளின் அன்றியே படுகி லானரோ. 235

2158 தீயவன் ஆவியை சிந்தல் கூடுறா
தாயினும் வெஞ்சமரி ஆற்றி இங்கிவன்
தேயுயர் தேரினைப் படையைச் சேனையை
மாய்வுறு விப்பனால் வல்லையா னென்றான். 236

2159 இத்திறம் இளையவன் இயம்பி ஏழிரு
பொத்திரம் தூண்டியே பொருவில் கேசரி
வத்திர முடையவன் வையம் உந்துவான்
சித்திர நெடுந்தலை சிந்தி நீக்கினான். 237

2160 சாரதி தலையது தரையில் வீழுமுன்
சூரொடு தோன்றினான் சுளிந்தொர் தண்டினை
ஓரிமை ஒடுங்குமுன் உருமின் உய்த்தலும்
வார்கழல் இளையவன் மருமம் மாய்ந்ததே. 238

2161 விடலரும் திறலுடை வீர வாகுவின்
தடமிகும் உரம்புகு தண்டஞ் சாளரத்
திடையிடை கதிர்வரும் எல்லை காணுறும்
பொடியென லாகியே புகையில் போயதே. 239

2162 தோட்டுணை வாகையான் சுளிந்து துண்ணென
ஓடடுறு நெடுங்கணை உய்த்தொ ராயிரம்
மோட்டுடை விறலரி முகத்தன் ஏறிய
சேட்டுடை மணிநெடும் தேரை வீட்டினான். 240

2163 தேரழிந் திடுதலும் ஆர்த்துச் சிங்கனை
ஆருயிர் கொள்ளுதும் அற்ற மீதெனாப்
பாரிடரி வரைகளும் படையும் வீசியே
சாருற வளைந்தனர் சமரின் முந்தினார். 241

2164 வெய்யவன் அங்கது வெகுண்டு நோக்கியே
செய்யதோர் மணிநெடுஞ் சேமத் தேர்புகா
ஐயிரு நூறுவில் லதனை ஆயிரம்
கையினில் எடுத்தனன் கடிதின் வாங்கினான். 242

2165 கருமணி வரைபுரை காமர் வில்லெலாம்
அரவுறழ் குணங்கள்கொண் டவுணன் கையுற
திருமுடி பலவுடைக் கிரியிற் செல்லினம்
உருகெழு மின்னொடும் உறுவ போன்றவே. 243

2166 பிடித்திடும் விற்களில் பிறங்கு நாணொலி
எடுத்தனன் எடுத்தலும் உயிர்கள் யாவையும்
துடித்தன அண்டமும் துளக்க முற்றன
முடித்தலை பனித்தனன் முளரித் தேவனும். 244

2167 வணக்கிய விற்களின் மடங்கல் மாமுகன்
கணக்கில வாகிய கடல்கள் வானெழீஇத்
தணக்கில பொழிந்தெனச் சரங்கள் சிந்தலும்
பிணக்குவை ஆயினர் பெயர்ந்த பூதர்கள். 245

2168 தாள்களும் கரங்களும் தலையும் சிந்தினர்
கோளுறு தசையொடு குருதி சிந்தினர்
மூளைகள் சிந்தினர் முடியும் கால்பொரப்
பூளைகள் சிந்தின போலப் பூதர்கள். 246

2169 தருப்பயில் பாற்கடல் தனது சீகரம்
திரைப்பெருங் கரங்களால் சிந்தல் போன்றதால்
அரிப்பெரு முகத்தவன் ஆயி ரங்கையால்
துரப்புறு கண்களைத் தூண்டு கின்றதே. 247

2170 மண்டல நிரந்தன வானம் தூர்த்தன
எண்டிசை மறைத்தன கிரிகள் ஈண்டுவ
தெண்டிரை எங்கணும் செறிவ அப்புறத்
தண்டமும் போவன அவுணன் வாளிகள். 248

2171 மருப்புயர் திசைக்கரி மருமம் பாய்வன
பருப்பதம் ஏழையும் பகிர்வ மேருவாம்
பொருப்பையும் போழ்வன புணரி தோறமர்
நெருப்பையும் தணிப்பன நீசன் வாளியே. 249

2172 மாறுபட் டவன்விடும் வாளி மாரியால்
ஈறுபட் டிடாததோ ருயிரும் யாக்கைகள்
கூறுபட் டிடாததோ ருயிரும் கொம்மென
ஊறுபட் டிடாததோ ருயிரும் இல்லையே. 250

2173 எண்படும் அரிமுகன் எடுத்த வில்லுமிழ்
புண்படு கணைமழை பொதிந்து போகுறா
விண்படு நெறியெலாம் விலக்கி மாற்றியே
ஒண்புவி ஆக்கிய துலகம் யாவையும். 251

2174 தாக்குறும் அரிமுகன் சரங்கள் பாரிடர்
யாக்கைகள் உருவியே எடுத்து நொய்தெனப்
போக்குறு கின்றன புலாவின் சூட்டினைக்
கோக்குறு சலாகையின் குழுவு போலவே. 252

2175 மெய்ந்நெறி யுணர்கிலார் வெறுக்கை பெற்றது
துன்னிய கிளைக்கொரு துன்ப மாதல்போல்
ஒன்னலன் விடுங்கணை உலப்பின் றோடலால்
தன்னுறு படைகளைத் தானுங் கொன்றவே. 253

2176 தீந்தொழில் அரிமுகன் செறித்த வாளிகள்
வாய்ந்திடுஞ் சேணெறி மாற்றும் பான்மையால்
காய்ந்திடுஞ் செங்கதிர்க் கடவுள் மேற்றிசைப்
போந்திலன் மீண்டிலன் புலம்பி நின்றுளான். 254

2177 கொம்பொடு பேரியுங் குணிலும் ஏனைய
வெம்படை யாவையும் விரவி மேற்செலக்
கம்புளும் கரண்டமும் கனைந்து சுற்றிடச்
செம்புனல் கரும்புனல் அளக்கர் சென்றதே. 255

2178 இத்திறம் அரிமுகன் இயற்றும் போரினை
மெய்த்திறன் மொய்ம்புடை வீரன் காணுறாச்
சித்திரத் தவனெதிர் சென்று வாங்கினான்
கைத்தலத் திருந்ததன் கடவுள் வில்லினை. 256

2179 வாக்கிய சிலைதனில் வறிது வாணொலி
ஆக்கினன் ஆக்கலும் மலைந்த தண்டமும்
தீக்கிளர் குஞ்சியர் செருச்செய் தானவர்
ஏக்கம தடைந்தனர் இரிந்து போயினார். 257

2180 மாக்களின் இருந்தவர் மதங்கொள் வெங்கரி
மேக்குற வைகினோர் தேரின் மேவினோர்
தாக்குறு படைகளுஞ் சயமுஞ் சிந்தியே
யாக்கைகள் நடுக்குற யாரும் வீழ்ந்தனர். 258

2181 வேறு
அவ்வ ழிப்பட நாணொலி உறுத்தியே அடலோன்
கைவ ழிப்படு சிலையினில் கணைமழை சிதறித்
தெவ்வ ழிப்படு சீயமா முகத்தவன் செலுத்தும்
எவ்வ ழிப்படு பகழியும் அறுத்தனன் இமைப்பில். 259

2182 பிரமர் எண்ணிலர் பயந்திடும் உயிர்களைப் பின்னாள்
ஒருவ னாகிய கண்ணுதல் தொலைக்குமா றொப்பச்
செருவ லாளனாம் இளையவன் பகழிகள் சிதறி
அரியின் மாமுகன் விடுகணைத் தொகையெலாம் அறுத்தான். 260

2183 மிக்க நேமியிற் புவனியின் அகலிரு விசும்பில்
திக்கின் மேருவின் வரைகளில் தீயவன் பகழி
புக்க புக்கதோர் இடங்களில் தன்கணை பூட்டி
அக்க ணந்தனில் அவன்விடு வாளிகள் அறுத்தான். 261

2184 புறத்த ராமென மன்னுயிர்க் கின்னலே புரியும்
திறத்தன் வாளியை மைந்தனின் றட்டது தேவர்
குறித்து நோக்கியே சூர்முதற் கிளையெலாம் குமரன்
அறுத்த நாள்வரு மகிழச்சியைக் கிடைத்துநின் றார்த்தார். 262

2185 அகழி யார்கலி நொஞ்சிசூழ் முதுநகர் அடர்த்தோன்
திகழி யானைகள் வெருவரும் அரிமுகத் திறலோன்
பகழி யாவையும் அட்டதோ அங்கவன் படைத்த
புகழி யாவையும் அட்டதன் றோவெனப் புகன்றார். 263

2186 அள்ளல் செற்றிய அளக்கர்சூழ ஆசுரத் தரசன்
தள்ளல் உற்றிடு பகழியைத் தனதுகைச் சரத்தால்
வள்ளல் அத்துணை அறுத்தனன் அகற்றமற் றதனைக்
கள்ள லைத்தார் அரிமுக மேலையோன் கண்டான். 264

2187 வில்லெ டுத்தது நின்பொருட் டாகுமால் விரைவின்
மல்லெ டுத்தநின் மொய்ம்பினைக் கரங்களை மார்பைப்
பல்லெ டுத்திடு தலையினை நாசியைப பதத்தைச்
சொல்லெ டுத்திடு நாவினைச் சரங்ளால் துணிக்கேன். 265

2188 திரண்ட கையுளேன் சிலைத்தொழில் காட்டுறு செருவில்
இரணடு கையுடை நீகோலாம் என்முனம் ஏற்பாய்
முரண்ட னிச்சிலை தொட்டநின் கையினை முடித்துக்
கரண்டம் உண்ணிய புரிகுவன் முந்துநீ காண. 266

2189 எமரி ருக்குறு மகேந்திர நகர்தனில் ஈண்டுஞ்
சமர கத்தினில் என்பெருந் தானைகள் தம்மில்
குமரர் தங்களிற் சொற்றமாக் கொண்டன முற்றும்
உமிழு விக்குவன் உன்னுயிர் தன்னையான் உண்பேன். 267

2190 என்னும் மாற்றங்கள் அரிமுகன் இசைத்தலும் ஏந்தல்
பன்னு கின்றதென் பற்பல நினக்குள படையைத்
துன்னு தானைகள் யாவையுஞ் செற்றுனைத் துரப்பேன்
என்னு டைச்சிலை வன்மையைப் பார்த்தியா லென்றான். 268

2191 சொற்ற மாத்திரத் தவுணனார் அழல்விழி தூண்டக்
கொற்ற வெஞ்சிலை பத்துநூ றொருதலை குனித்துப்
பொற்றை ஈர்ங்கணை ஆயிரத் தாயிரம் பூட்டி
வெற்றி மொய்ம்புடை ஒருவன்மேற் சென்றிட விடுத்தான். 269

2192 சீற்றம் மிக்கநம் இளையவன் சிலையெனக் கொண்ட
கூற்றை வாங்கியே பத்துநூ றாயிரங் கொடுங்கோல்
ஆற்றல் மிக்கன தூண்டியே மேலவை அறுத்து
வீற்றும் ஆயிரம் ஆயிரம் பகழிகள் விட்டான். 270

2193 நம்பி தொட்டிடு கணையினை மகேந்திர நகரோன்
தம்பி பத்துநூ றாயிரங் கணைகளாற் சாய்த்து
வெம்பி ஆயிர கோவெவ் வாளிகள் விடுப்ப
எம்பி ராற்கிளை யோனும்அக் கணையினை எய்தான். 271

2194 குராவ ணிந்திடு குமரனுக கிளையவன் கொடுங்கோல்
பராவ லன்விடு பகழியைப் பாரிடைப் படுத்தக்
கராச லங்களை யடுமுகன் அதற்குமுன் கணைகள்
இராயி ரந்தொடுத் தண்ணறன் சிலையினை இறுத்தான். 272

2195 மாறில் வெஞ்சிலை இற்றுழி இளையதோர் வள்ளல்
வேறொர் கார்முகன் வாங்குமுன் அகலத்தில் வெய்யோன்
நூறு கோடி புங்கவங்களை அழுத்தலும் நொய்தின்
ஆறு கோடியொத் திழிந்தன அகலிருங் குருதி. 273

2196 குருதி யாகத்தின் இழிந்திடத் தன்சிலை குனித்துப்
பரிதி ஒண்கதிர் என்னநூ றாயிரம் பகழி
கருதி விட்டிடக் கருதலன் அங்கது காணா
இருது நாண்முகி லாமென அவைதொடுத் திறுத்தான். 274

2197 அல்லி னோர்மதி எழுந்தென அவுணருள் உதித்த
மல்லல் வாலிய அரிமுகன் தொடுகணை மாரி
ஒல்லென் வாளியான் மாற்றியா யிரங்கணை உந்திச்
சில்லி ஆழிகள் அறுத்தவன் தேரினைச் சிதைத்தான். 275

2198 ஏறு தேரழிந் திடுதலும் அரிமுகன் இமைப்பின்
மாறொர் வையமேற் பாய்ந்தனன் வார்சிலை வளைப்ப
ஆறு மாமுகற் கிளையவன் கணைகளால் அவுணன்
நூறு பத்தெனுஞ் சிலையையும் அறுத்தனன் நொடிப்பில். 276

2199 வில்லி ழந்தனன் மானமும் இழந்தனன் வீரச்
சொல்லி ழந்தனன் பெருமிதம் இழந்தனன் தொல்சீர்
எல்லி ழந்தனன் பெருமையும் இழந்தனன் இலங்கும்
பல்லி ழந்திடு விடவரா ஒத்தனன் பதகன். 277

2200 ஏதி லானொருங் காயிரஞ் சிலைகளும் இழந்து
மாது யர்ப்படு நிலைமையை நோக்கியே மறங்கொள்
பூதர் ஆர்த்தனர் அமரர்கள் ஆர்த்தனர் புரைதீர்
வேதர் ஆர்த்தனர் முகுந்தரும் ஆர்த்தனர் விண்மேல். 278

2201 ஆயி ரஞ்சிலை ஒருதலை துணிந்ததும் அமரர்
நாய கன்தனக் கடியவன் விற்றொழல் நலனும்
மாய னாதியர் இகழ்ச்சியும் பூதர்தம் வலியுங்
காயு நெஞ்சுடை மடங்கல்மா முகத்தவன் கண்டான். 279

2202 தேவர் ஆர்ப்பையும் இந்திரர் ஆர்ப்பையுந் திசையின்
காவ லாளர்தம் ஆர்ப்பையும் எமையடக் கருதும்
மூவர் ஆர்ப்பையுஞ் சாரதர் ஆர்ப்பையும் முனிவோர்
ஏவர் ஆர்ப்பையுந் துன்பினுக் குதவுவன் என்றான். 280

2203 வேறு
தீயா ருக்கோ ரெல்லைய தானான் திறல்மேலான்
தூயா ருக்கே இன்னல்பு ரிந்தான் தொலைகில்லான்
தாயாய் முந்தே தம்மை அளித்தாள் தருகின்ற
மாயா பாசந் தன்னையெ டுத்தான் மறமிக்கான். 281

2204 ஒட்டிப் பேபர்செய் மாற்றலர் தம்மை யொருபாலாற்
கட்டிக் கொள்ளா ஆருயிர் உண்டு கடிதேகிக்
கிட்டித் தொல்லை ஞாயிறு தோன்றுங் கிரியுய்த்து
விட்டுப் பேரா தாண்டுறை கென்னா வீசுற்றான். 282

2205 மறியா நிற்குந் தெண்டிரை ஏழும் வந்தொன்றாய்ச்
செறியா நிற்குங் கொல்லிது என்னத் திசைசூழ்போய்
எறியா நிற்கும் பாசமி ருட்கோ ரிடமாகிப்
பொறியா நிற்குந் தீயழல் சிந்திப் புகுந்தன்றே. 283

2206 சேணா டுற்றோர் யாரும் இரிந்தார் செருவாற்றல்
பூணா நிற்கும் பூதரும் யாரும் பொருமுற்றார்
ஆணா யுற்றோர் யாரினும் மேலோன் அதுதன்னைக்
காணா ஈதோர் மாயைகொல் என்றே கருதுற்றான். 284

2207 ஆர்ப்பாய் உற்ற தெண்டிரை கொல்லோ அஃதன்றேல்
போர்ப்பான் வந்த பாயிருள் கொல்லோ புயம்வீக்கி
ஈர்ப்பான் உற்ற நாணது கொல்லோ யாதேனுந்
தீர்ப்பேன் வல்லே என்று நினைந்தான் திறல்வாகு. 285

2208 ஆற்றான் மற்றிவ் வாறுதெ ரிந்தே அதுதீர்ப்பான்
மாற்றா கின்ற தொல்படை தன்னை வாங்காமுன்
கூற்றாய் நின்றோன் வீசிய பாசங் குழுவோடும்
காற்றாய் வந்திங் கியாவரை யுங்கட் டியதன்றே. 286

2209 பல்லோ ராகிப் போர்புரி பூதப் படையோரும்
வில்லோ ராகும் எண்மரும் ஏனை விறலோருந்
தொல்லோர் கூறும் ஆடல்கொள் மொய்ம்பின் துணையோனும்
எல்லோர் தாமும் வீக்குறு பாசத் திடையுற்றார். 287

2210 மேற்றான் எய்தி வீக்கிய பாசம் மிடல்வீரர்
மாற்றா நிற்பர் தொல்லுணர் வோடு மலிவாரேல்
ஆற்றா ரென்னச் செய்குவன் யானென் றவர்புந்தி
தேற்றா வண்ணஞ் செய்துள தம்மா சிறுபோழ்தின். 288

2211 வேறு
தொன்னிலை உணர்வு மாழ்கித் தொல்வலி சிந்திச் சோரும்
அன்னவர் தொகையை எல்லாம் அந்தர நெறிக்கொண் டேகி
மின்னென அளக்கர் வாவி மேருமால வரைபோல் நின்ற
பொன்னவிர் உதய மென்னும் பொருப்பிடைப் புகுந்த தன்றே. 289

2212 கதிபடர் கின்ற காலிற் கருத்தினிற் கடிதின் ஏகித்
துதியுறு திருவின் கேள்வேன் துயில்புரி கடலில் துஞ்சும்
உதயமால் வரையின் எய்தி உயிர்ப்பிலா துறங்கு கின்ற
மதவலி வீரர் தம்மை வைத்துடன் இருந்த தன்றே. 290

2213 விழுமிய பூதர் யாரும் வீரரும் விளிந்து வெய்யோன்
எழுதரும் உதயம் புக்கா ரென்பது தெரிந்து நோக்கித்
குழுவொடு பொருது ளாரைக் கொன்றுயிர் குடித்தேன் வல்லே
அழகிதென் னாற்றல் என்றான் அமரரை அலக்கண் கண்டான். 291

2214 ஓடினான் கொல்லோ போர்க்கென் றுற்றதும் இலையோ எங்குந்
தேடினேன் காண்கி லேனால் யாண்டையான் சிறுவன் அம்மா
சாடினான் சாடி னானென் றுரைப்பது சழக்கோ தம்பி
வீடினான் அல்ல னோவென் றண்டங்கள் வெடிக்க ஆர்த்தான். 292

2215 கேசரி முகன்இவ் வாறு கிளத்தினன் ஆர்க்கும் எல்லைத்
தூசியின் முந்து போன தூதுவன் ஒருவன் நண்ணி
ஆசறு பூத வெள்ளம் ஆயிரத் தோடு செவ்வேள்
பாசறை இருந்தான் யானும் பார்த்தனன் வந்தேன் என்றான். 293

2216 ஒற்றன துரையைக் கேளா ஒளெயி றிலங்க நக்குப்
புற்றுறை அரவ மென்னப் புதல்வன்எற் பொருவான் அஞ்சி
மற்றவண் உறைந்தான் கொல்லோ வல்லையில் யானே ஏகி
இற்றையோர் கணத்தில் அன்னான் இருஞ்சமர் முடிப்ப னென்றான். 294

2217 என்றனன் படரும் எல்லை இன்னதோர் நிகழ்ச்சி யாவும்
ஒன்றற நோக்கி வானோ உயங்கினர் ஓட லுற்றார்
சென்றனர் அதனை நாடிக் காலெனுந் திறலின் வெய்யோன்
குன்றெறி நுதிவேல் அண்ணல் குரைகழல் பணிந்து சொல்வான். 295

2218 அத்தகேள் பூத ரோடும் அடுபடைத் தலைவர் ஏகி
மெய்த்திறற் பெரும்போ ராற்ற வெகுண்டரி முகத்து வெய்யோன்
கைத்தலத் திருந்த சூழ்ச்சிக் கயிற்றினால் நமரை யெல்லாம்
எய்த்திட வீக்கி வெய்யோன் உதயத்தில் இட்டா னென்றான். 296

2219 ஆண்டகை வரம்பு சான்ற அறுமுக னவன்சொற் கேளா
யாண்டுளான் யாண்டு ளான்அவ் வரிமுகத் தவுணன் என்னத்
தூண்டிடு பொறியால் இங்ஙன் வருகுவான் போலு மென்றான். 297

2220 னுன்னலும் நகைத்துச் செவ்வேள் அரியணை இருக்கை நீங்கிப்
பன்மணி குயின்ற செம்பொற் பாதுகை சரணஞ் சேர்த்திப்
பொன்னவிர் கழல்க ளார்ப்பப் புறங்கடை காறும் போந்து
தன்னயல் வந்த காலைத் தருதிநந் தேரை யென்றான். 298

2221 ஆறுமா முகத்து வள்ளல் அருள்பணி தலைக்கொண் டேகி
மாறிலா முதல்வன் தந்த வையம் தழைத்து வெங்கால்
தாறுசேர் கோலும் நாணுந் தங்கினன் கடாவி உய்ப்ப
ஏறினான் அதன்மேல் ஐயன் இமையவர் யாரும் ஆர்த்தார். 299

2222 இந்திரன் கவரி சாய்ப்ப இமையவர் வட்டம் வீசச்
சந்திரன் தபனன் என்போர் தண்ணிழற் கவிப்புத் தாங்க
அந்தகன் உடைவாள் பற்ற இயக்கர்கோன் அடைபபை கொள்ளச்
சிந்துநீர் அரசன் செம்பொற் படியகம் ஏந்தச் சென்றான். 300

2223 நாயகன் குமரன் போர்மேல் நடப்பது தெரிந்து பூதர்
ஆயிர வெளத் தோரும் ஆர்கலி நாண ஆர்த்துக்
காயெரி உமிழுஞ் சூலங் கணிச்சிதண் டெழுவு நாஞ்சில்
மீயுயர் பழுவங் குன்றங் கொண்டனர் விரைந்து சூழ்ந்தார். 301

2224 அடித்தனர் பறைகள் சங்கம் ஆர்த்தனர் ஐயன் சீர்த்தி
படித்தனர் பாங்கர் எங்கும் பனமணிக் கவிகை வட்டம்
பிடித்தனர் தமது வீரம் பேசினர் முரி யேற்றுக்
கொடித்தொகை அநந்த கோடி கொண்டனர் குணிப்பில் பூதா. 302

2225 மூவர்கள் முதல்வன் வந்தான் முக்கணான் குமரன் வந்தான்
மேவலர் மடங்கல் வந்தான் வேற்படை வீரன் வந்தான்
ஏவருந் தெரிதல் தேற்றா திருந்திடும் ஒருவன் வந்தான்
தேவர்கள் தேவன் வந்தான் என்றன சின்ன மெல்லாம். 303

2226 ஆசறு பூதர் சூழ அமரர்வாழ்த் தெடுப்ப ஐயன்
பாசறைக் களத்தை நீங்கிப் பறந்தலை நிலத்தின் எல்லை
வீசுறு மருத்து மின்னும் வெஃகுற நொடிப்பிற் செல்லக்
கேசரி முகத்தி னானுங் கிளர்படை யோடு நேர்ந்தான். 304

2227 பருப்புறும் எழுவும் வான்றொன் பழுவமும் பரசுந் தண்டு
நெருப்புமிழ் சூல வேலும் நேமியுங் கொழுவுங் குன்றும்
பொருப்புறழ் பூதர் வீசிப் பொருக்கென அவுணர் தம்மை
மருப்புயர் களிற்றை மாவை வையத்தை அடுத லுற்றார். 305

2228 குந்தமும் மழுவுந் தண்டுங் குலிசமும் எழுவுங் கோலும்
முந்திய கழுமுள் வேலும் முசலமுங் கொழுவுஞ் சங்கும்
எந்திரக் கவண்வீழ் கல்லும் எஃகமும் பிறவு மெல்லாஞ்
சிந்திநின் றவுணர் பூதப் படையினைச் செறுத்த லுற்றார். 306

2229 இருதிறப் படைகள் தம்மில் இத்திறம் பொருத வெல்லைக்
குருதிவந் தலைப்ப மார்பு சென்னிதோள் குறைந்து வேறாய்த்
தரையிடை மறிந்தார் பல்லோர் சங்கரன் விடுத்த மூரல்
விரிகனல் சிதறிப் பற்ற வெந்துவீழ் புரம தேபோல். 307

2230 கண்டனன் அஆயை செய்கை கனல்பொழி பரிதிக் கண்ணான்
மண்டமர் புரியா நிற்கும் மாற்றலர் தம்மை வாரி
உண்டனன் எனது சீற்றம் ஒழிக்குவன் ஒல்லை யென்னா
அண்டமும் திசையும் தானே ஆகுவோர் வடிவம் கொண்டான். 308

2231 ஆயிர முடியின் மௌலி அண்டத்தின் முகட்டை நக்கப்
பாயிருங் கரங்கள் அண்டப் பாங்கரை அலைப்பப் பாருட்
போயின பதங்கள் அண்டத் தடியினைப் பூழை செய்ய
மாயையாம் இனைய வாறோர் வடிவுகொண் டார்த்து வந்தான். 309

2232 வந்திடு சீற்றத் துப்பின் மடங்கலின் தோற்றம் நோக்கித
அந்தகன் அசைந்து நின்றான் ஆதவன் இரிய லானான்
இந்திரன் துளக்க முற்றான் எரிபதை பதைத்துச் சோர்ந்தான்
சிந்தையின் மருட்கை உற்றார் திசைமுகன் முதலாம் தேவர். 310

2233 வேறு
அன்னதொர் எல்லையில் ஆளி முகத்தோன்
முன்னுறு பூதம் முழங்கொலி நீத்தம்
என்னதும் அங்கை இராயிரம் ஓச்சி
உன்னுமுன் வாரினன் உண்டல் பயின்றான். 311

2234 ஈட்டுறு பூதரி ருங்குழு வத்தை
நீட்டினன் அள்ளுதல் நேமிகள் மாறாய்
மாட்டுறு கொண்டல்கள் வாருவ போலும். 312

2235 ஆயிர கோடியொ ரங்கையி னாகப்
போயின பாணிகள் பூதரை அள்ளச்
சீய முகங்கெழு செம்மல் அகன்பேழ
வாய்களில் இட்டு விழுங்கினன் மன்னோ. 313

2236 மீனம தாக வியன்படை அங்கைக்
கானுறு குன்று கறித்திற னாக
வானபல் பூதரை யட்டிடு சாலைப்
போனக மாமிசைந் தான்புகை வாயான். 314

2237 அண்டமொ ராயிர மாங்கொரு பாங்கர்
விண்டுவெவ் வேறு விளங்குவ போலுங்
கண்டகன் வெய்யக ணங்களை எல்லாம்
உண்டிடு கின்ற உலப்பில பேழ்வாய். 315

2238 செப்பரும் வென்றிகொள் சீயமு கத்தோன்
கைப்புகு பூதக ணத்தினர் யாரும்
அப்பெரு வாய்களின் ஆற்றுறு மாக்கள்
உப்பிடை சென்றென உற்றனர் அன்றே. 316

2239 தானவன் அங்ஆஆ தனிற்படு பூதர்
மேனிகழ் வாய்தொறு மேவரு பான்மை
ஊனமில் விண்ணவர் ஊர்தொறும் இம்பர்
மானவ ரியாரும் வழிக்கொளல் போலும். 317

2240 மண்ணிது அன்றெனின் வானவர் வைகும்
விண்ணிது அன்றெனின் வெவ்வசு ரேசர்
நண்ணுல கீதென நாடினர் தீயோன்
கண்ணகல் வாயது கண்டிடு பூதர். 318

2241 வாய்க்கொளும் எல்லை மடங்கல் முகத்தோன்
மூக்குடன் அஞ்செவி மூலமும் வல்லே
நோக்கினார் இங்கிது நூழைகொல் என்னா
ஊக்கொடு சிற்சில ரோடினர் போனார். 319

2242 அந்தமில் சீயன் அகன்பெரு வாய்போய்க்
கந்தரம் நீங்கினர் நெஞ்சு கடந்தார்
உந்திபு புகுந்தனர் ஒண்புவி யுள்ளோர்
சிந்துறு கீழநிலை வென்றுறு மாபோல். 320

2243 சீயமு கங்கெழு செம்மலு யிர்ப்பிற்
போயினர் உந்தி புகுந்தவர் சில்லோர்
ஆயிரம் யோசனை யந்தரம் மீண்டு
மேயினர் அங்கவன் மீண்டவு யிர்ப்பால். 321

2244 வெவ்விட மென்ன விளங்ககசு ரேசன்
துவ்விட வேயக டுற்றிடு தொல்லோர்
அவ்விடம் யாவனும் ஆதியை உன்னற்
கிவ்விட மேயினி தென்றனர் சில்லோர். 322

2245 வேறு
களித்தவன் மடியுது கணவ ராயிடைக்
கிளைத்தனர் கைகளிற் படையிற் கீறினர்
துளைத்தனர் கெடாமையில் தொல்லை வன்மைபோய்
இளைத்தனர் ஒருசிலர் யாது செய்வரால். 323

2246 ஆயிரம் வெள்ளமாம் ஆடற் பூதரை
வாயிடைப் பெய்துதன் அகட்டில் வைத்துள
சீயமா முகத்தவன் செயலைப் பற்பகல்
ஓய்வற மொழியினும் ஒழிதற் பாலதோ. 324

2247 இத்திறம் நிநழ்ந்திட ஈண்டு பாரிடர்
பத்துநூ றெனப்படும் பரவை நீத்தமுங்
கைத்தலம் வாரினன் கயவன் மோட்டினுள்
வைத்தலுங் கண்டனர் வானு ளோரெலாம். 325

2248 எண்கெழு பூதரை நுங்கி னான்இனி
மண்கெழு பொருளெலாம் வாரி நுங்குமால்
விண்கெழு நம்மையும் விரைவிற் பற்றியே
உண்குவன் எனமருண் டும்ப ரோடினார். 3261

2249 நேடிய ஒற்றுவர் நின்றி லார்விரைந்
தோடினர் அவுணர்கோன் உபயத் தாள்மலர்
சூடினர் சென்னியில் தொழுத கையினர்
மாடுறு பலசன மகிகச் கூறுவார். 327

2250 ஏதமில் அரிமுகத் திளவல் கந்தவேள்
தூதனைப் பிறர்தமைத் தொலைவில் பூதரில்
பாதியை நாண்வலைப் படுத்து வீட்டியே
ஆதவன் எழுகிரி யகத்தர் ஆக்கினான். 328

2251 ஈங்கிது வினவியே ஈசன் தன்மகன்
தாங்கிய வேலொடு சமரின் ஏற்றிட
ஓங்குமோரி வடிவுகொண் டுனது வின்னவன்
ஆங்கெதிர் பூதரை அள்ளி நுங்கினான். 329

2252 இவ்வரை நிகழ்ந்தன இனைய இத்துணை
மைவரு மிடற்றினன் மதலை யோடுபோரிக்
கவ்வையை இயற்றிடுங் கன்னல் ஒன்றினில்
தெவ்வர்கள் இலரெனச் செய்து மீளுமால். 330

2253 என்னலும் அரியணை இகந்து போய்த்தழீஇ
நன்னய மொழபல நவின்று தூதுவர்
உன்னினர் விழைந்தசீர் உதவி மன்னவன்
தன்னுழை ஒருவனை நோக்கிச் சாற்றுவான். 331

2254 கந்தனொ டரிமுகன் கனன்று போர்செய்வான்
முந்துள தானையின் முடியும் பற்பல
இந்தநன் னகருறை படைகள் யாவையும்
உந்துதி ஆயிடை ஒல்லைநீ யென்றான். 332

2255 சாற்றிய வுரைகொடு தாழ்ந்து கம்மியன்
காற்றென அமரிடைப் போமின் போமினென்
றேற்றுரி முரசினை எறிவித் தானரோ. 333

2256 பணையொலி கேட்டலும் பதியுள் வைகிய
இணையறு தானைகள் வெள்ளம் யாவையும்
மணிகெழு வகுப்புடன் ஆர்த்துச் சென்றுசூர்த்
துணையவன் அமர்புரி சூழல் புக்கவே. 334

2257 அம்புதி யாமென அனிகஞ் சென்றுழித்
தும்பையஞ் சிகழகைச் சூரன் என்பவன்
எம்பிதன் போர்வலி காண்பன் யானெனாச்
செம்பொனந் தவிசினுந் தீர்ந்து போயினான். 335

2258 தன்பெரு மந்தித நடுவண் தங்கிய
கொன்பெருஞ் சிகரியாம் மேருக் குன்றின்மேல்
இன்புறும் திருவொடும் ஏறி னானரோ
பொன்புனை இதயமேல் இரவி புக்கென. 336

2259 தாதவிழ் தார்முடித் தம்பி கொண்டதோர்
மேதகு வடிவமுந் தமியன் வேளுறப்
பூதர்கள் உண்டியாய்ப் போன தன்மையுங்
காதலின் அவுணர்கோன் கண்ணின் நோக்கினான். 337

2260 வருமித மென்றுமன் னுயிர்கட் கல்லல்செய்
கருமித வழிக்கொரு கனலில் தோன்றினான்
பெருமிதம் விம்மிதம் பெரிதும் எய்தினான்
உருமித மாமென நகைக்கும் ஓதையான். 338

2261 இங்கிவன் நின்றிட இதற்கு முன்னரே
சங்கையில் பாரிடத் தானை முற்றவுஞ்
சிங்கமா முகத்தவன் நுகருஞ செவ்வியின்
அங்குறும் அறுமுகன் அதனை நோக்கினான். 339

2262 ஒருத்தனை யாகியே உலகெ லாமடும்
நிருத்தன தருள்மகன் நேர லாரொடுஞ்
செருத்தொழில் புரிவதோர் சிறிய ஆடலைக்
கருத்திடை உன்னினன் கணிப்பில் ஆற்றலான். 340

2263 வேறு
செய்ய தாமரை வனங்களுஞ் செங்கதிர் தொகையும்
ஐய சேயொளி ஈன்றிருந் தென்னஆ றிரண்டு
கையும் மூவிரு முகங்களும் உடையவன் காலோன்
வையம் உந்திட அடுதொழில் இயற்றுவான் வந்தான். 341

2264 வேறு
வந்திடு கின்ற காலை வயப்பெரும் பூதர் யாரும்
அந்தமுற் றதனை யோரா அடுகரி பரிதோர் செற்ற
வெந்திறல் அவுணர் கோன்றன் மேதகு படைஞர் முற்றுங்
கந்தவேள் தன்னைச் சூழ்ந்தாரி கனலிசூழ் கடலே யென்ன. 342

2265 சூழ்தரும் அவுண வீரர் தொலைவில்தம் படைகள் முற்றும்
றுழ்தரும் உருமிற் பெய்ய உலகுடை முதல்வன் காணாக்
காழ்தரு மேரு அன்ன கார்முகன் ஒன்று வாங்கி
வீழ்தரும்அருவி போலும் வியன்குணத் தோதை கொண்டான். 343

2266 ஆயிர கோடி ஞாலத் தண்டங்கள் வெடித்த மற்றைப்
பாயிரும் புனலின் அண்டப் பத்திகள் பகிர்ந்த பாங்கர்
தீயழல் அண்டங் கீண்ட செறிமருத் தண்டம் விண்ட
மீயுயர் வெள□மூ தண்டம் வெய்தென உடைந்த அன்றே. ச 344

2267 அப்பெரு நாணின் ஓதை அரிமுகன் தானை மள்ளர்
செப்புறு கேள்வி யாற்றுஞ் செவிப்புலம் புகுத லோடுங்
கைப்படை சிந்தி வீழ்ந்தரி கவிழ்ந்தன களிறு மாவும்
ஒப்பில்சீர் அருளித் தேர்கள் ஒல்லென உடைந்த அன்றே. 345

2268 மூரிவிற் கொண்ட நாணின் முழக்கினை வினவி யற்றால்
பாரிடைக் கவிழந்த தானைப் பரப்பையும் நோக்கி நின்றான்
ஆரிதைப் புரியும் நீரார் அரன்மகன் இவனாம் முன்னம்
தாரகற் கடந்தான் என்கை சரதமே போலு மென்றான். 346

2269 வாலுளை அலங்கு நெற்றி மடங்கலோன் இனைய கூறிப்
பாலகன் வன்மை யானே படுத்தனன் மீள்வ னென்னாக்
காலுடை நெடுந்தே ரோடுங் கையனோர் கணத்தின் நோந்து
வேலுடை அண்ணல் தன்னை நோக்கினன் விளம்ப லுற்றான். 347

2270 கண்ணுதல் முதல்வன் மைந்த கழறுவன் ஒன்று கேண்மோ
எண்ணலர் வலியை மாற்றல் இறையவர் கடனே அற்றால்
விண்ணவர் தமைத்தண் டித்தோம் அவர்க்குளும் அல்லை வேறோர்
நண்ணலன் எமருக் கில்லை நடந்ததென் னமருக் கென்றான். 348

2271 உறைதரும் அளியன் தன்னை வலியவன் ஒறுக்கின் நாடி
முறைகெழு தண்ட மாற்றி அண்டங்கள் முழுவ துக்கும்
இறையினைப் புரிதும் அற்றால் நீவிர்கள் இமையோர்க் கிட்ட
சிறையினை அகற்ற வந்தேஞ் செருவுமத் திறத்துக் கென்றான். 349

2272 எங்கள்நா யகமா யுள்ள இறையவன் இனைய கூறச்
சிங்கமா முகத்து வீரன் உருமிடி திளைத்த தொப்ப
அங்கையோ டங்கை தாக்கி அண்டமுங் குலுங்க நக்குப்
பொங்குவெஞ் சீற்ற மேலான் இங்கிவை புகலல் உற்றான். 350

2273 ஈங்கெமர் தமையும் வென்றாய் இமையவர் சிறையும் இன்றே
நீங்கினர் ஆவர் நீயும் நீக்குதி போலும் போலும்
நாங்களும் அளியர் தாமே நன்றுநின் சூழ்வே ஆற்றல்
ஓங்கிய துனது மாட்டே உண்மையி தன்றி யுண்டோ. 351

2274 இந்திர குமரன் தன்னை இமையவர் குழுவை வாரி
வெந்தளை மூழ்கு வித்து வீட்டிய சிறையை நீக்கல்
சந்திர மௌலி அண்ணல் தன்னினும் முடியா தென்றால்
மைந்தன்நீ ஒருவன் கொல்லோ முடித்திட வல்லை மன்னோ. 352

2275 கண்ணுதல் உனக்குத் தந்த காமரு சுடர்வேல் ஆற்றல்
எண்ணலன் மறலி யாகி இகழந்துபோர் இயற்றி னானை
உண்ணிகழ் ஆவி கொண்டாய் ஓடினால் உய்தி ஈண்டு
நண்ணிய தன்மை எங்கண் நல்வினை தந்த தன்றே. 353

2276 கடம்பமர் கண்ணி யாய்கேள் கடவுள்வேல் கொண்ட ஆற்றல்
திடம்படு நினது வன்மை யாவையுந் தெரிதந் துள்ளேன்
தடம்படு குவவுத் திண்டோள் தாரகன் போல ஞாட்பின்
மடம்படு கின்ற தில்லை வல்லைபோர் புரிதி மாதோ. 354

2277 பொருதிறல் வயவர் யாரும் பூதரிற் பலரும் மாய்ந்தே
எரிகதிர் உதயம் புக்கார் ஏனையோர் நீயுங் காண
விரைவில்என் அகடு சேர்ந்து விளிந்தனர் தமியன் நின்றாய்
செருவினை இழைத்தும் இன்னும் ஊக்கமே சீரி தம்மா. 355

2278 தாதவிழ் தருவின் நீழற் சயந்தனை அமரர் தம்மைத்
தீதுறு சிறையின் நீக்கச் சென்றநீ துணைவ ரோடு
பூதர்தந் தொகையை வாளா போக்கினை தமியன் நின்றாய்
ஊதியம் இதன்மேல் உண்டோ உனக்கிது கிடைத்த தன்றே. 356

2279 முனைகெழு சமரின் வந்து முடிந்தனர் முடிவி லாதார்
இனைவொடு புறந்தந் தேகி இரிந்துளார் தொகையும் அ□தே
அனையதை உணராய் கொல்லோ அமர்குறித் தீண்டு வந்தார்
கனவினும் விடுவ துண்டோ கடவுளர் சிறையை என்றான். 357

2280 என்றசொல் இறுக்கு முன்னம் இராறுதோ ளுடைய வள்ளல்
நன்றிவன் கொண்ட தென்னா நகைசெய்து சிலையிற் பூட்டி
ஒன்றொரு வயிர வாளி ஒல்லெனத் துரப்பத் தீயோன்
பொன்றிகழ் மருமம் புக்குப் புறத்துரீஇப் போய தன்றே. 358

2281 அருவிய னாக முள்ளான் அகன்பெரு விழகட் கூறாய்
அருவிய னாக மன்ன அரிமுகன் ஐயன் செங்கோல்
அருவிய னாக மூழ்க அலக்கணுற் றிழியுஞ் செந்நீர்
அருவிய னாக நின்றான் அமரர்மற் றதுகண் டார்த்தார். 359

2282 கற்றையங் கதிர்வேல் அண்ணல் காமரு பகழி பாய
மற்றவன் புறனும் மார்பும் வாயில்க ளாத லோடும்
மற்றது நோக்கித் தீயோன் அகட்டுறை கணங்கள் முற்றும்
புற்றெழு சிதலை யென்ன அந்நெறி துருவிப் போந்த. 360

2283 உய்குறு கணத்தின் தானை உந்தியை ஒருவி வாளி
செய்குறு வாயில் நீங்கித் தெழிப்பொடு புறத்திற் போக
மைகிளர் புந்தி வெய்யோன் மற்றது கண்டு சீறிக்
கைகொடு நெறியை மாற்றிக் கந்தன்மேல் ஒருதண் டுய்த்தான். 361

2284 அண்டம்விண் டதுகொல் என்ன அணிமணித் தொகுதி ஆர்ப்பத்
தண்டம்வந் திடுத லோடுந் தன்னிகர் இல்லா அண்ணல்
கண்டனன் இமைப்பில் நான்கு கணைதொடக் கதையைச் சிந்தி
ஒண்டிறற் சூரன் பின்னோன் நெற்றிபுக் கொளித்த அன்றே. 362

2285 ஒள□த்திடு கின்ற காலை உருகெழு மடங்கற் பேரோன்
களித்திடல் ஒருவி மேலைக் கடுஞ்சினக் கோட்புச் சிந்தித்
தெள□த்திடும் உணர்வும் இன்றிச் செய்யகோல் செலுத்து மன்ன
அளித்திட லொழிந்த காலத் துலகம்போல் அழுங்கி நின்றான். 363

2286 வேறு
போர்ந்திடும் உணர்வொடும் பிரிவில் துன்பொடும்
சேர்ந்திடும் அரிமுகத் தீயன் நின்றுழி
வார்ந்திடு குருதிதோய் வாயில் மூடுகை
சோர்ந்தன அருளவரத் தொலைந்த மாயைபோல். 364

2287 அறந்தவிர்ந் தொழுகினோன் ஆகந் தன்னிடைத்
திறந்திடு நெறிகளால் சிறையின் வைப்பொரீஇப்
பறந்திடு புள்ளெனப் படர்ந்து கந்தவேள்
புறந்தனில் வந்தன பூதம் யாவுமே. 365

2288 அன்றரி முகத்தவன் அலைத்து நுங்கின
கொன்றன எறிந்தன கூளி யாவையும்
வென்றிகொள் வேற்படை விமலன் ஆணையால்
துன்றிவந் தடைந்தன தொன்மை கூடியே. 366

2289 வேறு
அன்னதொரு காலை அறுமா முகக்கடவுள்
தன்னிகரி லாத தனக்கிளையோர் தங்களையும்
துன்னலுறு பூதத் தொகையோர்கள் யாவரையும்
உன்னியவர் தம்பால் ஒருகோல் தொடுத்தனனே. 367

2290 உந்தும் பகழி உததி பலகடந்து
முந்துங் கதிருதயம் முன்னுற்று மொய்ம்பர்தமைப்
பந்தம் கொடுசூழ்ந்த பாசவலை சிந்திடலுங்
கந்தன் தனதருளாற் கண்டுயில்வார் போலெழுந்தார். 368

2291 பாசத் தளையிற் படுவார் அதுநீங்கி
மாசற்ற நல்லுணர்வு வந்தெய்த உய்ந்தனராய்ப்
பேசற் கரியஇன்பம் பெற்றோர்கள் தாமாகி
ஈசற் கினியான் இணையடிகள் வாழ்த்தெடுத்தார். 369

2292 ஆங்கதுகா லத்தில் அறுமுகவேள் உய்த்தகணை
பூங்கமலத் தோனுதவு புட்பகத்தின் மாட்சியதாய்த்
தீங்கிலிள மைந்தர்தமைச் சேனை யொடுமுகந்து
தாங்கி விசும்பின் தலைக்கொண்டு சென்றதுவே. 370

2293 என்று திகழ்வெற்பை இகந்தேழ் கடல்நீங்கிச்
சென்று கடிது செருநிலத்திற் சேனையொடு
நின்ற குமரன் நெடுந்தாள் முனமுய்த்துத்
துன்று கணைபொதிந்த தூணியிடைப் புக்கதுவே. 371

2294 அந்த அமையத்தில் அடல்வீர மொய்ம்பினனும்
இந்திரனும் போற்றும் இலக்கருடன் எண்மர்களும்
அந்தமி லாப்பூத அனிகங் களும்அளியால்
கந்தன் இணையடிகள் கைதொழுது தாழ்ந்தனரே. 372

2295 நீக்கம் பெறாதுயிர்க்குள் நின்றானைத் தொல்வறிஞன்
ஆக்கம் பெற்றென்ன அடிவணங்கிப் போற்றுதலும்
வீக்குங் கணைகழற்கால் வீரர் தமைநோக்கித்
தேக்குங் கருணையினால் ஈதொன்று செப்பினனால். 373

2296 தொக்கீர் அவுணன் தொடுமாயைச் சூழவலையில்
புக்கீரி புலர்ந்தீர் புலன் அழிந்தீர் யாப்புறவும்
தக்கீர் உதயந் தனிற்புகுந்தீர் இவ்வாறு
மிக்கீரும் நொந்தீர்கள் போலும் மிகவென்றான். 374

2297 முந்தை உணர்வு முடிந்தாலென் னாருயிர்போய்
அந்த நிரயத் தழுந்தி அயர்ந்தாலென்
வெந்துயரம் மூழ்கி வினைப்பிறவி புக்காலென்
எந்தை அருளுண்டேல் எமக்கென் குறையென்றார். 375

2298 ஆங்காகும் எல்லை அருமறையுந் தேறரிய
ஓங்கார மூலத துணர்வாய் உறைபகவன்
நீங்கா நெறியான் நிறைபே ரருள்புரியப்
பாங்காக நின்ற பரிசனர்கள் போற்றினரே. 376

2299 வேறு
அன்னதொ ரமைதியில் அண்ணல் வார்சிலை
துன்னுறு நாணொலி கேட்டுச் சோர்வுறா
முன்னுற வீழ்படை முதல்வன ஆடலை
உன்னுறு செய்கையால் எழுந்த ஒல்லையில். 377

2300 ஈங்கிவன் ஒருமகன் எமையெ லாஞ்சிலை
தூங்கிய நாணினால் தொலைக்குங் கொல்லெனாத்
தாங்கிய படையுடைத் தகுவர் தானைகள்
தீங்கனல் பரந்தெனச் சினங்கொண் டார்த்தவே. 378

2301 ஆழிமால் கடல்புரை அவுண மாப்படை
காழுலாம் பலபடைக் கலமுஞ் சிந்தியே
ஊழநாள் எல்லையின் உலகெ லாமடுங்
கேழிலான் மதலையைக் கிளர்ந்து சூழந்தவே. 379

2302 சுற்றிய வேலையின் முறுவல் தோன்றிட
நெற்றியங் கண்ணுடை நிமலன் மாமகன்
கொற்றவெஞ் சிலையினைக் குனித்துப் பூட்டியே
செற்றிய கணைமழை சிதறி னானரோ. 380

2303 அங்கியின் வடிவின ஆலம் போல்வன
கங்குலை நிகர்ப்பன காலற் கொப்பன
பொங்கிய வெஞ்சினப் புயங்கம் நேர்வன
செங்கதிர் மலைவன செம்மல் வாளியே. 381

2304 மின்னினுஞ் சுடரின உருமின் வெய்யன
பொன்னுறழ் நிறத்தன மணியின் பொற்பின
மன்னிய வானவில் மாறு கொள்வன
பன்னிறம் படைத்தன பகவன் வாளியே. 382

2305 வேறு
சூலம் போல்வன தோமரம் போல்வன சுடர்வாய்
ஆலம் போல்வன நாந்தகம் போல்வன அடல்வேற்

கோலம் போல்வன கழுமுளும் போல்வன குலிச
சாலம் போல்வன ஆறுமா முகன்விடு சரங்கள். 383

2306 அறத்தை நல்கலின் அந்தணன் போல்வன அகிலத்
திறத்தை அன்பொடு போற்றலிற் செங்கண்மால் போல்வ
ஒறுத்து மன்னுயிர் உண்குறும் அவுணரை ஒருங்கே
இறுத்தல் செய்திடுந் தன்மையால் ஈசனே போல்வ. 384

2307 காற்றிற் செவ்விதிற் செல்வன கறங்குவ கடுங்கட்
கூற்றிற் கொப்பன மனத்தினுங் கடியன கொடுந்தீ
நூற்றுக் கோடிகள் அணுகினும் விசையினால் நொய்தின்
மாற்றத் தக்கன குமரவேள் விடுத்திடும் வாளி. 385

2308 ஒன்று தொட்டிடிற் கோடியாம் ஒல்லையில் அவையுந்
துன்று கோடிமேற் கோடியாம் மேலுமத் தொகையே
அன்றி யாரதற் கெண்கொடுத் துரைபபவர் அநந்தம்
என்று சொல்வதே முருகவேள் தொடுங்கணைக் கிலக்கம். 386

2309 கார்பி ளந்திடும் அளக்கரை உண்டிடுங் கதிரோன்
தேர்பி ளந்திடும் வடவையை விழுங்குறுந் தேவர்
ஊர்பி ளந்திடும் மேருவைப் பிளந்திடும் உலவாப்
பார்பி ளந்திடும் ஞானநா யகன்விடும் பகழி. 387

2310 வரைகி ழிப்பதும் புவியினைப் பிளப்பதும் வரம்பில்
திரைக டற்குடித் திடுவதும் பிறவுமோர் சிறப்போ
அரிய வாயிர கோடியண் டங்களாம் அனைத்தும்
உருவி நிற்கில பின்னரும் ஓடுமென றுரைக்கின். 388

2311 தொடுநெ டுங்கணை இவ்வகை செறிதலுஞ் சூழ்வா
அடிது ணிந்தன கைத்தலந் துணிந்தன அணிதோள்
முடிது ணிந்தன உரந்துணி வுற்றன முகில்தோய்
கொடிது ணிந்தன இரதமுந் துணிந்தன குலைந்தே. 389

2312 கரைகள் பட்டென அவுணர்கள் பட்டனர் கடலின்
நிரைகள் பட்டெனக் களிறுகள் பட்டன நிரந்த
திரைகள் பட்டெனப் புரவிகள் பட்டன செறிந்த
வரைகள் பட்டெனப் பட்டன அளவைதீர் மான்தேர். 390

2313 ஒப்புக் கொண்டிடா மேலையோன் ஒன்றை ஒன்றார்க்குந்
துப்புக் கொண்டிடும் அற்புதம் உணர்ந்தவன் தொன்னாள்
வைப்புக் கொண்டபா ரண்டங்கள் முழுவதும் வரம்பில்
அப்புக் கொண்டதோ ரண்டமே ஆக்கிய அதனால். 391

2314 செப்பு றத்தகும் விம்மிதம் அன்றிது தேவர்
எப்பு றத்தருங் காண்கிலார் எம்பிரான் கணைகள்

ஒப்பு றத்தரும் அண்டத்தின் தொகையெலாம் உரீஇப்போய்
அப்பு றத்தினில் இடுவன அவுணர்தந் தலைகள். 392

2315 மூரி யண்டலர் யாக்கைகள் எடுத்துடன் முடுகிப்
பாரி யண்டங்கள் ஆயிர கோடியும் பகிர்ந்து
வாரி யண்டங்கள் இடையிடை சிந்திமற் றவற்றைச்
சோரி யண்டங்கள் ஆக்குவ அண்ணல்தொல் கணைகள். 393

2316 ஒண்டு ளிப்படு குருதியும் அவுணர்கள் உரமுங்
கண்ட துண்டமுஞ் சென்னியுந் தோள்களுங் கரமும்
முண்ட மாங்கரி பரிகளும் விளிந்ததேர் முற்றும்
அண்டம் எங்கணுஞ் செறிந்தன அட்டிய திறம்போல். ச 394

2317 புள்ளு லாவுவேல் அறுமுகன் பகழிபோர் புரிந்த
மள்ளர் மாப்படை அலைப்பதோ அரிதுவல் விரைவால்
அள்ளல் வாரிசூழ் ஆயிர கோடியண் டத்தின்
உள்ள தானவர் தம்மையும் முடிவுசெய் துலவும். 395

2318 குமர நாயகன் தொடுசரம் நிரத்தலுங் குளிர்ந்த
கமல மாமலர் முகைபொரு முகத்தினர் கரத்தர்
தமர நேமிகொள் புகழ்ச்சியர் வணங்குறு தலையர்
அமரர் யாவரும் வானிடைப் பிழைத்துநின் றார்த்தார். 396

2319 கங்க முற்றன கொடிபிற வுற்றன கவந்த
சங்க முற்றன குணங்கரும் உற்றன தகுவர்
அங்கம் இற்றன கரிபரி இரதமிற் றனவால்
சிங்க மாமுகன் ஒருவனும் நின்றனன் செருவில். 397

2320 மீயு யர்ந்தசூழ் அண்டத்தின் அளவெலாம் விரவ
மாய வன்மையிற் கொண்டிடு பெருந்தகை வடிவந்
தூயயன் வாளிகள் பட்டுணர் வழிதலால் தொலைந்து
சீய மாமுகன் தொன்மைபோல் நின்றனன் தேர்மேல். 398

2321 நின்ற தீயவன் தானுறும் அயர்ச்சியை நீங்கிச்
சென்ற தன்படை யாவையுங் கண்டிலன் சிறுவன்
கொன்று வீட்டின னென்பது தெரிந்துளங் கொதியா
ஒன்று போலவோ ராயிரஞ் சிலைகள்கொண் டுற்றான். 399

2322 அலைவ ளைந்தபாற் கடல்மிசைப் பத்துநூ றம்பொன்
மலைவ ளைந்தமர் தன்மைபோன் மன்னன்மாட் டன்றித்
தலைவ ளைந்திடா அரிமுகன் தனதுகைத் தலத்தால்
சிலைவ ளைந்திடக் குனித்தனன் சுடுசரந் தெரிந்தான். 400

2323 வேறு
சீய மாமுகன் செஞ்சிலை பூட்டிநூ
றாயி ரப்பத் தடுசரம் ஏவலும்

நாய கன்னது கண்டு நகைப்புறா
ஓய்வில் வாளியொ ராயிரந் தூண்டினான். 401

2324 ஆற்றல் மேதகும் ஆயிரம் வாளியால்
மாற்ற லன்கணை மாரி விலக்கியே
சாற்று தற்கரி தாகிய தன்மையான்
வீற்றும் ஆயிரம் வெங்கணை யுந்தினான். 402

2325 உந்து கோலையொ ராயிரம் வாளியாற்
சிந்தி யேதிறற் சிங்கமு காசுரன்
ஐந்து நூறிரண் டாயிரம் வெங்கணை
எந்தை மேல்வர ஏவினன் என்பவே. 403

2326 பதகன் வாளிகள் பத்திலக் கத்தையம்
நுதிகொள் வெங்கணை நூறுபத் தாயிரங்
கதுமெ னத்தொடுத் தேமறை காண்கிலா
அதிர்க ருங்கழல் அண்ணல் அகற்றினான். 404

2327 திருத்த குந்திறற் சீய முகத்தினான்
உருத்து வாளியொ ராயிரந் தூண்டுறாப்
பரத்தின் மேற்படு பண்ணவன் தேர்விடு
மருத்தின் மார்புற வல்லை அழுத்தினான். 405

2328 ஆர ழற்சினத் தாளரி மாமுகன்
கூரு டைக்கணை நெஞ்சு குளித்திட
மாரு தப்பெய ரோன்வலி சிந்திடாச்
சோரி மிக்கெழத் துன்புற எய்தினான். 406

2329 பாகு பட்ட பருவரல் நோக்கியே
வாகை அண்ணல் வரிசிலை கால்வளைஇ
ஏக நூறு பகழிதொட் டெண்ணலன்
சேகை மாண்கொடித் தேரினை வீட்டினான். 407

2330 தேர ழிந்திடத் தீயரின் தீயவன்
ஊர ழிந்த உடுபதி போன்றுளான்
கார ழிந்திடக் கல்லென ஆர்ப்புறாப்
பாரி ழிந்தனன் பல்கணை வீசினான். 408

2331 வீசு கின்ற வியன்கணை யாவையும்
மாசில் காட்சியன் வாளியின் மாற்றிடா
ஆசில் வெஞ்சரம் ஆயிரந் தூண்டியே
நீசன் விற்களை நீள்நிலஞ் சேர்த்தினான். 409

2332 அண்டலன் கொண்ட ஆயிரஞ் சாபமுந்
துண்ட மாகித் தொலைந்து நிலம்புக

விண்டு நான்முகத் தோனும் விண்ணோர்களுங்
கண்டு நின்று கரமெடுத் தார்த்தனர். 410

2333 கோலு மிழ்ந்த குனிசிலைக் கூட்டறக்
கால வெவ்வழல் என்னக் கனன்றுளான்
சூல மொன்று துளக்கினன் வீசினான்
ஆல காலம் அளக்கர்உய்த் தாலென. 411

2334 துன்ன லன்விடு சூலத்தை ஏழிரு
கொன்னு னைக்கணை தூண்டிக் குறைத்திடாப்
பின்னும் ஆயிரம் பேரழற் புங்கவ
மின்னெ னத்துரந் தான்அடல் வேலினான். 412

2335 கொண்ட வேற்கைக் குமரன் சரங்களைக்
கண்டு தீயன் கனன்று கரந்தனில்
தண்டம் ஒன்றில் தரைபடச் சிந்தியே
அண்டம் விண்டிட ஆர்த்தனன் ஏகினான். 413

2336 விடுத்த வாளி பொடித்ததும் வெவ்வியோன்
பிடித்த தண்டொடு போர்வதுங் காண்குறா
வடித்த ஏழ்கணை தூண்டினன் வன்கதை
எடுத்த கையை இருநிலஞ் சேர்த்தினான். 414

2337 சேர்த்து முன்னறத தீயவன் தோளினும்
பேர்த்தும் ஆங்கொர் பெருங்கை புறப்படப்
பார்த்த லம்புகு தண்டினைப் பற்றியே
ஆர்த்து வீசினன் ஆதியந் தேவன்மேல். 415

2338 ஒட்ட லன்தொட உற்றதண் டத்தின்மேல்
நெட்ட ழற்கு நிகர்கணை ஆயிரம்
விட்ட றுத்தனன் மேல்வரு பாந்தளை
அட்டி டுங்கதிர் ஆதவன் என்னவே. 416

2339 அண்டர் நாயகன் ஆயிரம் வாளியால்
தண்டம் வீழத் தடிதலும் மாற்றலன்
கண்டு சீறிக் கடுந்திறல் கூற்றிடைப்
பண்டை நாட்கொண்ட பாசத்தை வீசினான். 417

2340 சுற்று பாசத் தொடர்ச்சயை நோக்கிவேள்
செற்றொ ராயிரந் தீக்கணை தூண்டலும்
வற்றல் மாண்கொடி வன்னியின் தீச்சுடர்
உற்ற தாமென ஒண்பொடி யாயதே. 418

2341 வேறு
நாணற் றதுகண் டனன்நா ணுறுவான்
ஏணுற் றிடுசே யையிரா யிரமாம்

பாணித் தொகையைக் கொடுபற் றிடுவான்
பேணிச் சினமோ டுபெயர்ந் தனனே. 419

2342 சிங்கத் திறலோன் வருசெய் கைதனை
எங்கட் கிறைநோக் கியிரா யிரமாம்
வெங்கட் கணையா யினவிட் டவுணன்
அங்கைத் தொகையா வுமறுத் தனனே. 420

2343 கொற்றங் கெழுவுற் றகுகன் கணையால்
செற்றந் திகழ்ஆ ளரிசெய் யகரம்
அற்றம் புவிவீ ழுமுன்அங் கைநிரை
முற்றும் புதிதா கமுளைத் தனவே. 421

2344 அற்றுப் புவிவீழ் தருமங் கைகளை
மற்றத் துணைவந் தெழுமாண் கைகளால்
பற்றிச் செலஅன் னதுபார்த் தனனால்
நெற்றிக் கண்அளித் திடுநீள் சுடரோன். 422

2345 ஓரா யிரம்வா ளிகளுய்த் தவுணன்
ஓரா யிரநீண் முடியொல் லையறா
ஈரா யிரம்வெஞ் சரமே வியவன்
ஈரா யிரமொய்ம் பும்இறுத் தனனால். 423

2346 அன்பற் றவன்மொய்ம் புகளற் றனகண்
டின்புற் றனர்வா னவர்ஈண் டியவை
முன்புற் றதுபோ லமுளைத் தெழலுந்
துன்புற் றனர்யாக் கைதுளங் குறுவார். 4241

2347 கண்டான் இதுவிண் ணவர்காண் பரியோன்
பண்டா லவனத் திடைபா ணிசிகரந்
தண்டா தழல்கொய் திடுதன் மையினால்
உண்டா கியவா றெனவுன் னினனே. 425

2348 உன்னும் பொழுதத் தினில்உம் பரெலாம்
என்னிங் கிவன்மாய் வதெனத் தளர
முன்னம் பெயர்சிங் கமுகன் முனியாச்
செந்நி றிதோர் மொழிசெப் பினனால். 426

2349 உளைக்குங் கணைதள் ளியுகம் பலநீ
கிளைக்குந் தலைமொய்ம் புகெடுத் திடினும்
முளைக்கின் றதலான் முடிவுற் றிடுமோ
இளைக்கின் றனைநீ கொல்எனைப் பொருவாய். 427

2350 மொய்யுந் துதவத் தியல்முன் னலைநின்
ஐயன் தருமாற் றல்அறிந் திலைபோர்

செய்யும் படிவந் தனைசேய் ஒருநீ
உய்யும் படியன் றுனதூக் கமுமே. 428

2351 மாண்டே வர்தமைப் புரிவன் சிறைபோய்
ஆண்டே வருகின் றதுமாற் றலுளேன்
ஈண்டே அழிகின் றதுமில் லையிவண்
மீண்டே குதிநின் னுயிர்விட் டனனால். 429

2352 வேறு
என்னலும் அதனை ஓரா எம்பிரான் குமரன் சொல்வான்
உன்னுயிர் இழைத்த எல்லை யொழிந்தது கூற்றும் வந்து
பின்னுற நின்றான் என்நீ பிதற்றுதி உணர்வி லாதாய்
முன்னொரு கணத்தில் நின்னை முடிக்குவன் காண்டி யென்றான். 430

2353 படைப்பவன் குரவன் ஈது பகர்தலும் அவுணர் கோமான்
இடிப்பென ஆர்த்துக் குன்றம் இராயிரம் பறித்து வீச
நொடிப்பினில் அவற்றை வாளி நூற்றின்நுண் துகள தாக்கித்
தடப்பெரு மருமம் மூழ்கச் சரங்களா யிரத்தை உய்த்தான். 431

2354 மாயிரு நெடுங்கண் வாளி மார்பத்தை அகழ்ந்து துன்னக்
காயெரி கலுழுங் கண்ணான் கைகளால் அளவை தீர்ந்த
பாயிருங் குன்ற நாடிப் பறித்தலுங் கண்டு செவ்வேள்
ஆயிரங் கணைதொட் டன்னான் அணிமுடித் தொகையை வீழ்த்தான். 432

2355 அறுத்திடு தலைகள் வீழ ஆயிரஞ் சென்னி வல்லே
மறித்தும்வந் தெழுத லோடும் மடங்கல்மா முகத்தன் முன்னம்
பறித்திடு குன்றம் வீசிப் பருவலித் தடந்தோள் கொட்டி
எறித்தரு கதிரும் விண்ணோர் யாவரும் உட்க ஆர்த்தான். 433

2356 ஆர்த்திடு காலைச் செவ்வேள் ஆயிரத் திரட்டி கொண்ட
கூர்த்திடு பகழி தூண்டிக் குன்றங்கள் செற்று வெய்யோன்
தார்த்தட மொய்ம்பு முற்றுந் தள்ளினன் தள்ளு முன்னர்ப்
பேர்த்தும்வந் தெழுந்த அம்மா தவத்தினும் பெரிதொன் றுண்டோ. 434

2357 அத்திறங் ணண ஈதோ ராடலா உன்னி நூற்றுப்
பத்துடன் எட்டின் காறும் பரஞ்சுடா உருவாய் நின்றான்
மொய்த்திடு பகழ மாரி முறைமுறை துரந்து மொய்ம்பன்
கைத்தலஞ் சென்னி முற்றுங் கண்டதுண் டங்கள் செய்தான். 435

2358 திசைகளிற் போகும் நேமித் திறங்களிற் போகும் வெற்பின்
மிசைகளிற் போகும் பாரின் மீதினிற் போகும் மாந்தர்
நசைகளிற் போகும் விண்ணோர் நட்டிடைப் போகுஞ சிங்கன்
இசைகளிற் போகும் எங்கும் இற்றிடு சிரமுங் கையும். 436

2359 அகர தாதி யான எழுத்தெலா மாகிப் பின்னர்
மகரமு மான மேலோன்* வடிக்கணை துணித்து வீசுஞ்

சிகரமுந் துகர முற்றுஞ் சேணிடைச் சென்று மாயோன்
நகரமுந் தாவி அண்ட கோளகை நண்ணு கின்ற.
(* மகரமுமான மேலோன் - மகரமீன் உருக்கொண்ட குமாரக்
கடவுள். இவ்வரலாறு திருவுத்தரகோச மங்கைப் புராணத்துள்
கூறப்பெற்றுள்ளது.) 437

2360 தூவுடை நெடுவேல் அண்ணல் சுடர்க்கணை துணித்து வீச
மேலவன் தனது சென்னி மெல்லிதழ் அதுக்கி விண்மேல்
ஆவலங் கொட்டிச செல்ல அச்சமுற் றங்கண் நின்ற
தேவர்கள் மயக்கம் எய்தித் திருநில வரைப்பின் வீழந்தார். 438

2361 வஞ்சரை வஞ்சஞ் செய்யும் வள்ளலார் குமரன் தொட்ட
செஞ்சரம் அநந்த கோடி சென்றுசென் றறுத்து விட்ட
எஞ்சலில் அவுணன் மொய்ம்புந் தலைகளும் யாண்டுஞ் சிந்தி
விஞ்சையர் அமர்தற் கொத்த வரைகளின் மேவ லுற்ற. 439

2362 தூயவன் விடுதத வாளி துணித்திடும் ஒவ்வொர் சென்னி
வாயினை அடுபோர் தன்னில் வந்தசில் கணங்கள்நோக்கி
ஆயிர கோடி கொண்ட களேவரம் அதற்குள் இட்டு
மாயிருஞ் சிகர மாட மற்றிதென் றுற்ற வன்றே. 440

2363 பாடுறு சிரத்தில் ஒன்று பதைத்துவாய் பகிர அங்கண்
ஆடுறும் அலகை கோடி அகன்பிணக் குவைகள் உய்த்து
மாடமீ தென்று புக்கு மற்றது கடிதின் மூட
ஓடியுள் ளலைந்த தக்கன் வேள்வியில் உற்று ளார்போல். 441

2364 மன்புரி அவுணர் தோன்றல் வாய்பொதி சென்னி புக்குத்
துன்புறும் அலவை துண்டஞ் செவிநெறி துருவிப் போன
*முன்பொரு முனிவன் இல்லை முயங்குவான் உறையுள் புக்கோன்
இன்பொடு வன்மை சிந்தி நூழையால் இரிந்த வாபோல்.
(* ஒரு முனிவன் - கௌதமன். இல் - அகலிகை. முயங்குவான்
உறையுள் புக்கோன் - இந்திரன். நூழை - சலதாரை
அல்லது தூம்பு.) 442

2365 ஒன்னலன் தனது மொய்ம்பும் உருகெழு சிரமும் வீழ்ந்து
பன்னெடுங் கிரிக ளாக அவற்றிடைப் பலசூர்ப் பேயுந்
துன்னுறு கொடியுஞ் சூழ்வ தொல்லையிற் பொறிகள் நீங்க
முன்னவள் பதாகை யோடு முறையில்வந் துற்ற வாபோல். 443

2366 அரண்டருங் கழலான் இவ்வா றறுத்தலும் அவுணர் கோமான்
முரண்டகு சிரமுந் தோளும் பின்னரும் முளைப்ப நோக்கித்
திரண்டபல் கணைக ளோச்சிச் சென்னியில் ஒன்றுங் கையில்
இரண்டுமே நிறுவிப் பின்னர் யாவையுந் தடிந்தான் அன்றே. 444

2367 நீளுறு பதலை சிந்தி நின்றமர் இயற்று கின்ற
கோளரி முகத்து வீரன் குறைந்திடு முடியு இற்ற

தோள்களும் முன்ன ரேபோல் தோன்றிடப் புகுதும் எல்லை
ஆளுடை முதல்வ னாகும் அறுமுகன் அதனைக் கண்டான். 445

2368 நாற்றிசை முகத்தி னானும் நாகரும் பிறரும் உட்கச்
சீற்றம துளன்போல் ஐயன் சிறிதவண் உரப்ப லோடும்
மாற்றல னாகி நின்ற மடங்கல்மா முகத்தன் தன்பால்
தோற்றிடு சிரமுந் தோளுந் துளங்கிமீண் டொளித்த அன்றே. 446

2369 ஐயன துங்கா ரத்தால் அரிமுகன் சிரமும் மொய்ம்பும்
மெய்யிடை யொடுங்கிற் றம்ம மேவினார் தம்மை நோக்கி
மையுறு கருந்தா தன்ன வன்புறக் கமடஞ் சென்னி
ஒவ்யென யாக்கை தன்னில் ஒள□த்திடுந் தன்மை யேபோல். 447

2370 குன்றினை எறிந்த வைவேற் குமரவேள் கணையால் இற்ற
தன்றலை பானி தோன்றாத் தன்மையை அவுணன் பாரா
ஒன்றற முந்து பன்னாள் உணர்ந்திடு விஞ்சை முற்றும்
மன்றிடை அயர்த்தோ னென்ன மானமுற் றழுங்கி நின்றான். 448

2371 அங்கது கண்டு செவ்வேள் அருள்புரி கின்றான் நந்தம்
வெங்கணை பலவுஞ் சென்று வீட்டிய தலையும் உன்றன்
செங்கையுந் தோன்றிற் றில்லை எழுகெனச் செப்பு கைய
இங்குநீ பட்ட பின்கொல் முளைத்திட இருந்த தென்றான். 449

2372 இருதலை அயில்வேல் அண்ணல் இற்றன சிரந்தோள் என்றே
கருதலை என்பே ராற்றல் கடவுளர் யாருந் தேர்வர்.
ஒருதலை இருகை கொண்டே உலகெலாந் தொலைப்பன் என்னாப்
பொருதலை உன்னி யாங்கோர் பொருப்பினைப் பறித்து விட்டான். 450

2373 விட்டிடு பிறங்கல் தன்னை விரிஞ்சனுக் காசான் காணூஉ
நெட்டிலை வாளி ஒன்றால் நீறுசெய் திடுத லோடும்
பட்டது தெரிந்து மாய்வோன் அமரிடைப் பாணி யோடும்
இட்டிடு தண்டம் ஒன்றை எடுத்துநின் றிதனைச் சொற்றான். 451

2374 வேலினால் எறியு மாறும் வெஞ்சிலை வளைய வாங்கிக்
கோலினால் விடுத்த தொன்றைக் குறைத்திடு மாறும் அல்லால்
பாலநீ படைகள் வேறு பயின்றதொன் றிலைகொல் என்னா
மூலகா ரணமாய் நின்ற முதல்வன்மேற் கதையைத் தொட்டான். 452

2375 வெஞ்சின அவுணன் சொறற தன்மையும் விடுத்த தண்டுஞ்
செஞ்சுடா□ மேனி வள்ளல் சிந்தையின் மதித்து நோக்கிக்
கஞ்சம தனைய வோர்கைக் காமரு குலிசந் தன்னை
வஞ்சகன் உயிருண் டொல்லை வருகென விடுத்தான் மன்னோ. 453

2376 விடுத்திடு குலிச மேகி விரைந்தெதிர் தண்டந் தன்னைப்
பொடித்தது போலும் மென்னப் பூழிசெய் தடுக்கல் செல்லும்

இடித்தொகை யென்ன மார்பத் தெய்தியே அவுணன் ஆவி
குடித்தது புறத்துச் செந்நீர் கொப்பளித் தேகிற் றன்றே. 454

2377 வேறு
தூண்டா விடுகுலிசந் துண்ணென்ற கர்மார்ப்
கீண்டாவி கொண்டு கிழித்துவெரிந் சென்றிடலும்
வீண்டான் பதைபதைத்தான் வீழ்குருதி நீரலைப்ப
மாண்டான் கிடந்தான் மடங்கல்முக வெய்யோனே. 455

2378 அங்கப் பொழுதில் அடற்குலிசம் வான்போகிக்
கங்கைப் புனல்ஆழ்ந்து காமருபூந் தாதாடிச்
சங்கத் தவர்க்குள் தலையாந் தமிழ்ப்புலவன்
செங்கைக் குள்வந்து சிறப்புற் றிருந்துளதால். 456

2379 பார்த்தர்இந் நீர்மைதனைப் பங்கயத்த னாதிவிண்ணோர்
ஆர்த்தார் முறுவலித்தார் ஆடினார் பாடிமலர்
தூர்த்தார் மகிழ்ந்தார் தொழுதார்எங் கோன்புடையில்
போர்த்தார் வணக்கம் புரிந்தார் புகழ்ந்திட்டார். 457

2380 என்னா யகன்அவ் விமையோர்கள் எல்லோருக்குந்
தன்னா ரருள்செய்து சாரதவெள ளத்தினொடும்
மின்னார் புகர்அயில்வேல் வீரரொடு மீண்டனனால்
பொன்னா டெனவே புனைந்தபொலன் பாசறையில். 458

2381 பாசறையின் கண்ணேகிப் பாரிடத்தோர் சூழ்போத
வாசவனும் நான்முகனும் மற்றோரும் பாங்காகக்
கேசரிகள் தாங்குங் கிளர்செம்பொற் பீடிகைமேல்
ஈச னெனவே இனிதருள்செய் துற்றனனே. 459

2382 வெற்றிநெடு வேலோன் வியன்பா சறையிருப்ப
மற்றவனொ டாடி மடங்கல் முகத்தவுணன்
செற்றுகொடி யுண்ணச் செருநிலத்தின் மாய்ந்ததனை
ஒற்றர்தெரி குற்றே மகேந்திரத்தில் ஓடினரால். 460

2383 ஆடல் இளையோன் அவண்வீழ்ந் ததுநோக்கி
வீடினனோ மான்றனனோ என்றைய மேல்கொண்டு
நீடு சிகரியிடை நின்றோன் பதங்கள்முடி
சூடி அவலித்துத் தொழுதிதனைச் சொல்லினரால். 461

2384 குன்றம் பிளந்த குமரேசன் வச்சிரத்தால்
உன்றம்பி ஆவி ஒழிந்தான் அவன்மிசையப்
பொன்றுங் கணத்தோர் பொருப்புற்றார் எல்லோருஞ்
சென்றுய்ந் தனரீது திண்ணமெனச் செப்பினரே. 462

2385 வேயுற் றவர்சொல் வினவியுரோ மங்களெலாந்
தீயப் பொறிதுரப்பச் செங்கட் புனல்பெருக

வாயிற் புகைசெல்ல வாடிப் பதைபதைத்து
நோயுற்று வெங்கனலை நுங்கினர்போல் வீழ்ந்தனனே. 463

2386 வண்ணச் சிகரம் வழுவுற்றுக் கீழ்த்தலத்திற்
கண்ணில் பொழிந்த கடலினிடை வீழ்ந்தனனால்
ஒண்ணுற்ற காஞ்சி உமையவள்கோட் டத்தினின்றுந்
தண்ணுற்ற நேமித் தடத்திடையே வீழ்பவர்போல்.*
(* இங்கு காஞ்சி காமாட்சி ஆலயத்தின் மேல் மாடியிலிருந்து
சக்கர தீர்த்தம் என்னும் உலகாணித் தீர்த்தத்தில் தலை கீழா-
கவும் ஆமாறு விழுவதை உவமையாகக் குறிப்பதாகும். இச்-
செயலைக் 'கருமாறிப் பாய்தல்' என்பர். இது இந்நூலாசிரியர்
காலத்து நடந்து வந்தமையால் இதனை உவமை காட்டினார்.
ஆயினும் தற்போது இந்நிகழ்ச்சி நிகழும் வழக்கம் இல்லை; இக்-
காலத்தில், காஞ்சி காமாட்சி ஆலயத்தின் அடிமைகளான
பெண்களை 'கருமாறிப் பாய்பவர்' என்பர்.) 464

2387 மங்கு லெனவீழ்ந்து மறிந்து நிலமிசையே
அங்கை புடைத்திட் டலமந்து தொல்வலியுந்
துங்க விறலும் நலனுந் தொலைவெய்தப்
பொங்கு துயர்க்கடலின் மூழ்கிப் புலம்புறுவான். 465

2388 என்னையோ என்றன் இளவலோ தாரகற்கு
முன்னையோ சிங்க முகத்தவோ தானவர்கள்
அன்னையோ என்ன அருள்புரியும் ஆண்டகையோ
உன்னையோ தூதர் விளிந்தனையென் றோதியதே. 466

2389 அன்று மகவான் முதலாம் அமரர்தமை
வென்று தமியேற்கு விசயந் தனையளித்தாய்
இன்று சமரியில் இளம்பா லகன்ஒருவன்
கொன்றனனோ உன்னுயிரைக் கூற்றுவனுங் கொண்டானோ. 467

2390 உண்டுபோர் என்னின் உளங்களிக்கும் உன்னுயிரைக்
கொண்டுபோ னான்இன்று கூற்றனென வேகேட்கில்
தண்டுழாய் மாலுஞ் சதுர்முகனும் இந்திரனும்
பண்டுபோல் தத்தம் பதியாளப் போகாரோ. 468

2391 பொன்னை நிலந்தன்னைப் புதல்வர்களை மங்கையரைப்
பின்னை யுளபொருளை யெல்லாம் பெறலாம்
என்னை யுடைய இளையோனே இப்பிறப்பில்
உன்னை இனிப்பெறுவ துண்டோ உரையாயே. 469

2392 அண்டார் தமக்கோர் அரியே அரிமுகனே
விண்டான் அடைந்தாய் எனவே விளம்புகின்றார்
தண்டார் அகலத்துத் தாரகனை மக்களுடன்
கண்டாயோ யானிங் குறுதுயரங் காணாதாய். 470

2393 உண்டிக் கடனும்* ஒருவயிற்றோர் செய்கடனும்
எண்டிக்கும் போற்றியிட இன்றுகழத் தேகினைநீ
அண்டத் தவரை அலைத்துவரும் உன்திறலைக்
கண்டுற் றிடவே கடனற்றேன் தீயேனே.
(* உண்டிக்கடன் - செஞ்சோற்றுக்கடன்.) 471

2394 உற்ற துணைநீ யென்னுயிர்நீ உணர்ச்சியும்நீ
சுற்றமும்நீ தாதையும்நீ என்னிளைய தோன்றலும்நீ
நற்றவமும் நீயென்று நான்நினைந்தேன் நீயதனைச்
சற்றும் நினையாமல் தனித்திருக்கக் கற்றாயோ. 472

2395 பொற்றைக் கயலிருந்த பூட்கைமுகன் துஞ்சியபின்
ஒற்றைப் புயம்போய் உளந்தளர்ந்து வைகினன்யான்
இற்றைப் பகல்நீ இறந்தாய் அரிமுகனே
மற்றைப் புயமும் இழந்தேன் வறியேனே. 473

2396 என்னத் தனதண்டம் எங்குஞ் செலவிடுபடத்
தன்னத் தனியோன் அரற்றுமொழி தாங்களோ
நன்னத் தவனும் நளினத் தினிலுதித்த
அன்னத் தவனும் மகத்தவனும் ஆர்த்தனரே. 474

2397 இத்தன்மை மன்னன் இரங்கித் தெளுந்தெழுந்தே
உத்துங்க மிக்க ஒருதன் தவிசேறி
நித்தன் குமரனுடன் நேர்போய்ச் சமா இயற்றச்
சித்தந் தனிலே நினைந்துசினஞ் செய்தனனே. 475

ஆகத் திருவித்தம் - 2397